11 JUN 1996

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அளவீட்டு அலகுகளும், நியமங்களும், சேவைகளும் சட்டம்

---

*(1995, திசெம்பர் 21 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1996, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.85 | தபாற் செலவு : ரூபா 4.10

(1995, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

ச. வ—ஓ. 50/81

**நிறுவைகளும் அளவைகளும் தொடர்புபட்ட சட்டத்தை மீளாய்வு செய்வதற்கும், திரட்டுவதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அளவீட்டு அலகுகளும், நியமங்களும், சேவைகளும் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் நியமிக்கப்பட்ட திகதி எனக் குறிப்பிடு செய்யப்படும்) அத்தகைய திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

## பாகம் I

### அளவீட்டு அலகுகள்

2. சர்வதேச அலகு முறையும் (எஸ். ஐ.) நிறுவைகளும் பற்றிய பொது மகாநாட்டில் குறித்துரைக்கப்பட்டவாறானவையும் இதற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறானவையுமான அவ்வலகுகளின் வரைவிலக்கணங்களும் இலங்கையில் எல்லா நோக்கங்களுக்காகவும் அளவீட்டு அலகுகளுள் அடங்கும் :— அளவீட்டு அலகுகள்.

ஆயினும், நேரொத்த சர்வதேச அளவீட்டு அலகுகளில் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளவாறான, இதற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அத்தகைய அளவீட்டு அலகுகள், விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

## பாகம் II

### அளவீட்டு அலகுகளும் நியமங்களும், சேவைகளும் திணைக்களத்தையும் தேசிய அளவீட்டு ஆய்வு கூடத்தையும் தாபித்தல்

3. இச்சட்டத்தின் நோக்கங்களுக்கெனப் பின்வருவன தாபிக்கப்படல் வேண்டும் :— அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் திணைக்களத்தையும் தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தையும் தாபித்தல்.

(அ) அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் திணைக்களம் என அறியப்படவேண்டிய திணைக்களமொன்று அல்லது திணைக்களமொன்றின் பிரிவொன்று ; அத்துடன்

(ஆ) அத் திணைக்களத்திலுள்ள (இதனகத்துப் பின்னர் "ஆய்வுகூடம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) தேசிய அளவீட்டு ஆய்வுகூடம் என அறியப்படவேண்டிய ஆய்வு கூடம் ஒன்று.

2 —m089705—1,705 (05/00)

பணிப்பாளர் ஆதியோரை நியமித்தல்.

4. (1) இச்சட்டத்தின் நோக்கத்திற்காக —

(அ) அளவீட்டு அலகுகளும், நியமங்களும் சேவைகளும் பணிப்பாளராயிருப்பதற்கென பெயர் குறித்து அல்லது பதவி குறித்து (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளொருவரும்;

(ஆ) அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் பிரதிப் பணிப்பாளர்களாயிருப்பதற்கென பெயர் குறித்த அல்லது பதவி குறித்து ஆளொருவரும் ;

(இ) அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் உதவிப் பணிப்பாளர்களாயிருப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களும் ;

(ஈ) அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் கண்காணிப்பாளர்களாயிருப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களும் ;

(உ) அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் உதவிக் கண்காணிப்பாளர்களாயிருப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களும்; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன் கொடுக்கும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களும்

நியமிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட அளவீட்டு அலகுகளும், நியமங்களும், சேவைகளும் பிரதிப் பணிப்பாளர், பணிப்பாளரின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் பணிப்பாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பிரயோகிக்கலாம், புரியலாம் என்பதுடன் நிறைவேற்றலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் உதவிக் கண்காணிப்பாளர், அளவீட்டு அலகுகளும், நியமங்களும், சேவைகளும் கண்காணிப்பாளரின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, இச்சட்டத்தின்கீழ் அத்தகைய கண்காணிப்பாளருக்கு, அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம், புரியலாம் என்பதுடன் நிறைவேற்றலாம்.

## பாகம் III

### அளவீட்டு அலகுகளின் நியமங்கள்

இலங்கை நியமங்கள்

5. (1) அமைச்சரானவர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென, அவர் அவசியமானதெனக் கருதக்கூடியவாறான, அளவீட்டு அலகுகளின் அத்தகைய நியமங்களைக் காலத்திற்குக்காலம் பெற்றுக்கொடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பெற்றுக்கொடுக்கப்பட்ட அளவீட்டு அலகு எதனதும் நியமம் ஒவ்வொன்றும், இதற்கான முதலாம் அட்டவணையில் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளவாறான அளவீட்டு அலகு ஒன்றிற்குச் சமமான ஒன்றாக அல்லது அத்தகைய ஏதேனும் அளவீட்டு அலகின் பெருக்கமாக, அல்லது உபபெருக்கமாக இருத்தல்வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அளவீட்டு அலகு எதனதும் நியமம் ஒவ்வொன்றினதும் விவரணம் ஒன்று, பணிப்பாளரின் பணிப்பின்மீது கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் பெறப்பட்ட ஏதேனும் அளவீட்டு அலகின் ஒவ்வொரு நியமமும் நிறுவைகளினதும் அளவைகளினதும் சர்வதேச பணியகத்தின் ஆய்வுகூடத்தில் அல்லது வேறு ஏதேனும் நாட்டின் வேறு ஏதேனும் தேசிய ஆய்வுகூடத்தில் அளவுதிருத்தப்படுதலும் உறுதிப்படுத்தப்படலும் வேண்டும் அல்லது அத்தகையதொரு நியமம் இலங்கையில் பாவனைக்கு வருவதற்கு முன்னர் நியமமுறையொன்றினால் அளவுதிருத்தப்படுதல் வேண்டும்.

ஆயினும், அதன் தன்மையின் பயனைக்கொண்டு அதுவே ஒரு அடிப்படையான நியமமாகவுள்ள ஏதேனும் நியமத்தின் அல்லது உபகரணத்தின் விடயத்தில் அத்தகைய அளவுதிருத்தல் அவசியமாகாது.

(5) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், இப்பிரிவின்கீழ் பெறப்பட்டதும் வெளியிடப்பட்டதுமான ஏதேனும் அளவீட்டு அலகினது நியமமொன்று, இலங்கையில் வழக்கில் கொண்டுவரப்பட வேண்டுமெனவும், அத்தகைய நியமமானது வெளியிடப்பட்டதன் மேல் இலங்கை நியமமொன்றாதல் வேண்டும் எனவும், அத்தகையதுமான எல்லா நோக்கங்களுக்காகவும் உண்மையானதாகவும் செம்மையானதாகவும் கருதப்படவேண்டும் எனவும் வெளிப்படுத்தலாம்.

இலங்கை நியமங்கள், பணிப்பாளரின் பாதுகாப்பில் இருத்தல் வேண்டும்

6. (1) ஆய்வுகூடமானது பணிப்பாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இருத்தல் வேண்டும் என்பதுடன், அது இலங்கை நியமங்களைப் பேணுதலும் வேண்டும் ; அத்துடன், அத்தகைய நியமங்களின் பெறுமதியை வேறு ஏதேனும் ஆய்வுகூடத்திற்கு அல்லது நிறுவனத்திற்குப் பரவச் செய்தல் வேண்டும் என்பதுடன், இத்தகைய பணிகள் தொடர்பான ஆராய்ச்சியை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) இலங்கை நியமம் ஒவ்வொன்றும் பணிப்பாளரின் பாதுகாப்பின் கீழ் ஆய்வுகூடத்தில் அந்நோக்கத்திற்கென விதந்துரைக்கப்பட்ட அத்தகைய முறையில் வைத்துப் பேணப்படல் வேண்டும்.

(3) அமைச்சரானவர், மீள அளவுதிருத்துதலைத் தேவைப்படுத்தும் ஏதேனும் இலங்கை நியமத்தின் விடயத்தில் அத்தகைய நியமத்தைக் குறைந்தது பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது மீள அளவுதிருத்தம் செய்வித்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் அளவீட்டு அலகின் இலங்கை நியமம் எதுவும் அத்தகைய நோக்கத்திற்கென இலங்கைக்கு வெளியே அனுப்பப்படவேண்டியிருக்குமிடத்து, அமைச்சரானவர், அவ்வளவீட்டு அலகிற்கான குறியீட்டு நியமமொன்றை அத்தகைய இலங்கை நியமத்துடன் ஒப்பிடலால் சரிபார்க்கச் செய்யலாம்; அல்லது நியமமுறையொன்றினால் அளவுதிருத்தச் செய்து, அத்தாட்சிப்படுத்தச்செய்து, பணிப்பாளரின் பாதுகாப்பில் வைத்திருக்கச்செய்யலாம் என்பதுடன், அத்தகைய குறியீட்டு நியமமானது, இலங்கை நியமம் இலங்கையில் வழக்கிலில்லாத அத்தகைய நேரத்தின்போது இலங்கை நியமமொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

**குறியீட்டு நியமங்கள்.**

7. (1) அமைச்சரானவர் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென குறியீட்டு நியமமென அறியப்படும் இலங்கை நியமனத்தின் அத்தகைய பெறுமதி நியமத்தைப் பெறுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நியமங்களைப் பணிப்பாளரின் பாதுகாப்பில் வைத்தலும் வேண்டும். அத்தகைய குறியீட்டு நியமம் ஒவ்வொன்றும், இலங்கை நியமமொன்றுடன் ஒப்பிடல் மூலம் அல்லது நியமமுறை ஒன்றின்மூலம் குறித்துரைக்கப்பட்ட நியமங்கள் ஆய்வுகூடமொன்றில் அளவுதிருத்தப்படல் வேண்டும்.

(2) குறியீட்டு நியமம் ஒவ்வொன்றும் அதனது முதலாம் அளவுதிருத்தத்திற்குப் பின்னர் பணிப்பாளரினால் வழங்கப்பட்டவொரு பணிப்புரையின்மீது, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது ஆய்வுகூடத்தில் அளவுதிருத்தப்படுதல் வேண்டும்.

(3) அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெறப்பட்ட அளவீட்டு அலகு எதனதும் குறியீட்டு நியமமொன்று, இலங்கையில் பாவனைக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும் எனவும், அத்தகைய குறியீட்டு நியமமானது அதற்கு மாறாக எண்பிக்கப்படும்வரை உண்மையானதாகவும் செம்மையானதாகவும் கருதப்படல் வேண்டும் எனவும் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் வெளிப்படுத்தலாம்.

இரண்டாந்தர நியமங்கள்.

8. (1) பணிப்பாளரானவர், காலத்திற்கு காலம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறான, இலங்கை நியமங்களிலிருந்தும் குறியீட்டு நியமங்களிலிருந்தும் பெறப்பட்ட அத்தகைய வேறு இரண்டாந்தர நியமங்களையும் மூன்றாந்தர நியமங்களையும் பெறலாம்.

(2) பணிப்பாளரானவர், அத்தகைய இரண்டாந்தர, மூன்றாந்தர நியமங்கள் ஒவ்வொன்றையும் சரிபார்க்கவும் அளவுதிருத்தவும் செய்வித்தல் வேண்டும் என்பதுடன், சான்றுப்படுத்த அல்லது உறுதிப்படுத்தச் செய்வித்தலும் வேண்டும். அவ்வாறு சான்றுப்படுத்தப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட நியமம் ஒவ்வொன்றும் முரணானது என எண்பிக்கப்படும்வரை உண்மையானதும் சரியானதும் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாந்தர, மூன்றாந்தர நியமம் ஒவ்வொன்றும் பணிப்பாளரினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிகளில் சரிபார்க்கப்படுதல் அல்லது அளவு திருத்தப்படுதல் வேண்டும்.

9. ஓர் இலங்கை நியமம் குறியீட்டு நியமம் அல்லது இரண்டாந்தர அல்லது மூன்றாந்தர நியமம் எந்த அளவீட்டு அலகிற்காகத் தாபிக்கப் பட்டுள்ளதோ அந்த அளவீட்டு அலகை நேரடியாக அல்லது மறைமுக மாக அடிப்படையாகக்கொண்ட பௌதிகக் கணியங்களின் எல்லா அள வீடுகளும் அத்தகைய ஏதேனும் நியமத்தினைப் பின்பற்றிபதாக இருத் தல்வேண்டும். பௌதிகக் கணியங்களின் அளவீடுகள்.

10. ஏதேனும் அளவு திருத்தப்படுதலை அல்லது சோதனையைக் கொண்டுநடாத்துவதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அல்லது ஏதேனும் அளவு திருத்தப்படுதலை அல்லது சோதனையை நிறைவேற்றுவதற்கெனப் பணிப்பாளரினால் பணிக்கப்பட்டுள்ள ஆள் ஒவ்வொருவரும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அவரால் ஒப்பமிடப் பட்ட அளவு திருத்த அத்தாட்சிப்பத்திரம் ஒன்றை வழங்குதல் வேண் டும். அளவு திருத்தப் பட்டதற்கான அத்தாட்சிப் பத்திரம்.

11. நீதிமன்றமொன்று—

(அ) இலங்கை நியமம், குறியீட்டு நியமம், இரண்டாந்தர அல் லது மூன்றாந்தர நியமம் ஒவ்வொன்றும்பற்றியும்; நியமங்கள் பற்றிய நீதி நெறிக் கவனம்.

(ஆ) பத்தாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் அளவு திருத்த அத்தாட்சிப்பத்திரம்பற்றியும், நீதிநெறிக்கவனத் திற்கெடுத்தல் வேண்டும்.

## பாகம் IV

## வியாபாரத்திற்கான அளவீடுகள்

12. (1) முப்பத்துநான்காம் பிரிவில் வேறுவகையாக ஏற்பாடு செய் யப்பட்டுள்ளவாறு தவிர, அளவீட்டு அலகு ஒன்றினால் செய்யப்பட வுள்ள ஏதேனும் வேலை, விற்கப்படவுள்ள, ஒப்படைக்கப்படவுள்ள, கொண்டுசெல்லப்படவுள்ள, அளக்கப்படவுள்ள, கணிக்கப்படவுள்ள, செலுத்தப்படவுள்ள அல்லது உடன்பட்டுக்கொள்ளப்படவுள்ள ஏதேனும் பொருட்கள், சரக்குகள், வணிகப்பொருட்கள் அல்லது வேறு பொருட்கள் சம்பந்தமான ஒப்பந்தம், பேரம், விற்பனை அல்லது கொடுக்கல் வாங்கல் ஒவ்வொன்றும் மூன்றாம் அட்டவணையின் I ஆம் பாகத்தில் குறித் துரைக்கப்பட்டுள்ள அளவீட்டு அலகுகளில் ஏதேனும் ஒன்றிற்கிணங்க செய்யப்படுதலும், இருத்தலும் வேண்டும். எல்லா ஒப்பந் தங்கள், விற் பனைகள் முத லியனவும் கட்டணங்களின் அல்லது வரி களின் சேகரிப் பும் அதிகார மளிக்கப்பட்ட அளவீட்டு அலகுக ளில் இருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் அளவீட்டு அலகிற்கிணங்க இலங்கையில் விதிக்கப்படும் அல்லது சேகரிக்கப்படும் எத்தகையதுமான எல்லாக் கட்டணங்களும், வரிகளும் மூன்றாம் அட்டவணையின் I ஆம் பாகத்தில் குறித்துரைக்கப் பட்டுள்ள அளவீட்டு அலகுகளில் ஏதேனும் ஒன்றிற்கிணங்க விதிக்கப் படுதல் வேண்டும் என்பதுடன் சேர்க்கப்படுதலும் வேண்டும்.

(3) விற்பனைசெய்யும் நோக்கத்திற்கென கொள்கலமொன்றில் ஏதே னும் பொருளை இலங்கையில் பொதியாக்கலானது மூன்றாம் அட்டவணை யின் I ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அள வீட்டு அலகுகளில் ஏதேனும் ஒன்றிற்கிணங்கவிருத்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செய்யப்படாத அல்லது இராத ஒப்பந்தம், போம், விற்பனை அல்லது கொடுக்கல் வாங்கல் ஒவ்வொன்றும் வறிதாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் இப்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்திலிருந்து, போகத்திலிருந்து, விற்பனையிலிருந்து அல்லது கொடுக்கல் வாங்கலிலிருந்து அல்லது அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ், போகத்தின்கீழ், விற்பனையின்கீழ் அல்லது கொடுக்கல் வாங்கலின்கீழ் எவரேனும் ஆள் ஏதேனும் சந்தர்ப்பத்தில் ஏதேனும் நன்மையைப் பெற்றுக்கொண்டுள்ளவிடத்து, அல்லது பெற்றுள்ளவிடத்து, ஒரு நீதிமன்றமானது அத்தகைய நன்மை எவ்வாளின் செலவினால் அல்லது எவ்வாளின் கணக்கில் பெற்றுக்கொள்ளப்பட்டதோ அல்லது பெறப்பட்டதோ அவ்வாளிற்கு நட்டஈடு செலுத்தும் நோக்கத்திற்கு உசிதமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

மூன்றாம் அட்டவணையின் II ஆம் பாகத்திலுள்ள நிறுவைகளும் அளவைகளும் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவைகளாகவும் அதிகாரமளிக்கப்பட்ட அளவைகளாகவும் வெளிப்படுத்தப்படல்.

13. இதற்கான மூன்றாம் அட்டவணையின் II. ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள எல்லா நிறுவைகளும் அளவைகளும் முறையே அதிகாரமளிக்கப்பட்ட நிறுவைகளாகவும் அதிகாரமளிக்கப்பட்ட அளவைகளாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதுடன், அவ்வாறு இச்சட்டத்தின்கீழ் குறிப்பீடுசெய்யவும்படுகின்றன; அத்துடன், மூன்றாம் அட்டவணையின் அத்தகைய II ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிறுவையினதும் அளவினதும் வகுப்பு ஒவ்வொன்றும் இச்சட்டத்தில் நிறுவையினது அல்லது அளவையினது அதிகாரமளிக்கப்பட்ட வகுப்பு ஒன்று என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது என்பதுடன் அவ்வாறு குறிப்பீடு செய்யவும்படுகின்றது.

பரிசோதனையாளர்களை நியமித்தல்.

14. (1) பணிப்பாளர், இச்சட்டத்தினை நிருவகிப்பதற்கு அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான (இதனகத்துப்பின்னர் "பரிசோதகர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அளவீட்டுச் சேவைகளினதும் வியாபங்களினதும் பரிசோதகர்களையும் வேறு அலுவலர்களையும் நியமித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அத்தகைய பரிசோதகர் ஒவ்வொருவருக்கும் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் பரிசோதகர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட அல்லது பரிசோதகர் ஒருவர்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களை அவர் பிரயோகிக்கவேண்டியதும் கடமைகளை அவர் நிறைவேற்றவேண்டியதுமான (இதனகத்துப் பின்னர் ஒரு "பிரிவு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இடப்பரப்பொன்றினைக் குறித்தொதுக்குதல் வேண்டும்.

(3) ஆளெவரும் பரிசோதகர் ஒருவராக இருப்பதற்கு அவருக்குள்ள தகுதிபற்றிய, விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான பணிப்பாளரினால் ஒப்பமிடப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருந்தாலன்றி, இச்சட்டத்தின்கீழ் பரிசோதகர் ஒருவராக நியமிக்கப்படுதலாகாது. ஆள் எவரும் பரீட்சிக்கப்பட்டு விதிக்கப்பட்ட பரீட்சைகளில் பணிப்பாளரின் திருப்திக்குச் சித்தியடைந்தாலன்றி அத்தகைய சான்றிதழெதுவும் அவருக்கு வழங்கப்படுதலாகாது.

15. பணிப்பாளரானவர், 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதகர்களின் பயன்பாட்டிற்கு அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினதான மூன்றாந்தர நியமங்களுக்கு ஏற்பாடுசெய்தல் வேண்டும். அத்தகைய நியமங்கள் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் செயலகத்திலும் வைத்திருக்கப்படுதல் வேண்டும். மூன்றாந்தர நியமங்கள்.

16. ஆளெவரும் —

(அ) வகுப்பு அதன் மேல் அல்லது பக்கத்தில் தெளிவான இலக்கங்களில் அல்லது எழுத்துக்களில் அடையாளமிடப்பட்டிருந்தாலொழிய, இதற்கான மூன்றாம் அட்டவணையின் II ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள வகுப்பிற்குச் சமமான வகுப்பினதாகக் கொள்ளப்படும் ஏதேனும் நிறுவையை; அல்லது வகுப்பு அதன் மேல் அடையாளமிடப்பட்டுள்ள ஏதேனும் நிறுவையில் அல்லது அளவையின் பயன்பாடு.

(ஆ) கனவளவின் அளவீடு ஒன்றின் விடயத்தில் அதற்கு வெளிப்புறத்தில் அல்லது நீள அளவீடு ஒன்றின் விடயத்தில், முன்பக்கத்தில் வகுப்பானது தெளிவான இலக்கங்களிலும் எழுத்துக்களிலும் அடையாளமிடப்பட்டிருந்தாலன்றி இதற்கான மூன்றாம் அட்டவணையின் II ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள வகுப்பொன்றிற்குச் சமமான வகுப்பொன்றினதாகக் கருதப்படும் ஏதேனும் நீள அளவீட்டை அல்லது கனவளவு அளவையை,

ஏதேனும் வியாபார நோக்கத்திற்குப் பயன்படுத்துதலோ அல்லது ஏதேனும் வியாபாரத்திற்குப் பயன்படுத்துவதற்கென அவரது உடைமையில் வைத்திருத்தலோ ஆகாது;

ஆயினும் ஏதேனும் நிறுவையின் சிறிய அளவானது அத்தகைய அடையாளமிடுதலைச் செயற்படுத்த முடியாததாக்கினால், இப்பிரிவிலுள்ள எதுவும் அத்தகைய நிறுவையின் வகுப்பை அடையாளமிடுவதைத் தேவைப்படுத்துவதாகக் கருதப்படுதலாகாது.

17. (1) பரிசோதகர் எவரும் எட்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் சரியானதென அந்த நியமம் கடைசியாக உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து கணிக்கப்பட்டு, 8 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர் எந்நேரத்திலும் ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை பரிசோதிக்கும் நோக்கத்திற்கென மூன்றாந்தர நியமம் எதனையும் பயன்படுத்தலாகாது. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர் மூன்றாந்தர நியமங்களைப் பயன்படுத்தலும் சரிபார்க்கப்படாத உபகரணங்களின் பயன்பாடும்.

(2) பரிசோதகர் எவரும், அவரது பயன்பாட்டிற்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தை விதித்துரைக்கப்பட்ட முறையில் அந்த உபகரணம் சரிபார்க்கப்பட்டிருந்தாலொழிய இச்சட்டத்தின் நோக்கங்களுக்கெனப் பயன்படுத்துதலாகாது.

**நிறுவைகளையும் அளவைகளும் செய்வதன்மூலம் அல்லது விற்பதன்மூலம் பரிசோதகர்கள் இலாபம் பெறுதலாகாது.**

18. பரிசோதகர் எவரும் நிறுவைகளை அல்லது அளவைகளை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களைச் செய்யும், விற்கும் அல்லது பழுதுபார்க்கும் தொழிலில் ஈடுபடுதலோ அல்லது அதிலிருந்து இலாபம் பெறுதலோ ஆகாது.

**சரிபார்க்கப்படாத அல்லது அத்தாட்சிப்படுத்தப்படாத நிறுவையினது அல்லது அளவையினது விற்பனை.**

19. ஆள் எவரும் சரிபார்க்கப்படாததும், சரிபார்த்தலுக்கென விதித்துரைக்கப்பட்ட குறியொன்றினால் பரிசோதகரினால் இலச்சினையிடப்படாததும் அல்லது விதித்துரைக்கப்பட்ட விதத்தில் அத்தாட்சிப்படுத்தப்படாததுமான ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தை வியாபாரமொன்றில் பயன்படுத்துவதற்கென விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்கென வெளிக்காட்டி வைத்தல் ஆகாது.

**நிறுவைகள், அளவைகள் முதலியன யாவும் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.**

20. (1) நியமிக்கப்பட்ட திகதியிலிருந்தும், அதன் பின்னரும் நிறுவை, அளவை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணம் எதுவும் அத்தகைய நிறுவையின், அளவையின் அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தின் மாதிரியுருவானது, அத்தகைய நோக்கத்திற்கென இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கக்கூடியவாறான குறிப்பீடுகளுக்கும், பிழையின் எல்லைகளுக்கும் இணங்க, பணிப்பாளரினால் பரிசோதிக்கப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டும் இருந்தாலன்றி,

(அ) ஏதேனும் வியாபார நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுதலாகாது அல்லது ஏதேனும் வியாபாரத்தில் பயன்படுத்தப்படுவதற்கென ஆளெவரினதும் உடைமையிலிருத்தலாகாது.

(ஆ) உற்பத்தி செய்யப்படுதலோ அல்லது பயன்படுத்துவதற்கென இறக்குமதி செய்யப்படுதலோ அல்லது ஏதேனும் வியாபாரத்தில் பயன்படுத்துவதற்கென விற்பனை செய்யப்படுதலோ ஆகாது.

அத்தகைய ஏதேனும் பரிசோதனைக்காக அறவிடப்படும் கட்டணமானது விதித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளரினால் முன்பு அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவை, அளவை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணம் பின்னைய பரிசோதனையின்போது குறைபாடுள்ளதாகக் காணப்படுமிடத்து, பணிப்பாளரானவர், அத்தகைய முன்னைய அங்கீகாரத்தை நீக்குவதற்கும் அத்தகைய நீக்கம்பற்றி எவரேனும் ஆளுக்கு அறிவிப்பதற்கும் தத்துவமுடையவராதல் வேண்டும்.

21. (1) ஏதேனும் நிறுவையை, அளவையை அல்லது நிறுக்கும், அளக்கும் உபகரணத்தை விற்கும், பழுதுபார்க்கும் அல்லது உற்பத்தி செய்யும் அல்லது விற்பதற்கு, பழுதுபார்ப்பதற்கு அல்லது உற்பத்தி செய்யக் கருதும் ஆள் ஒவ்வொருவரும் பணிப்பாளரிடம் தம்மைப் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

**நிறுவைகள், உபகரணங்கள் முதலியனவற்றை விற்கும், பழுதுபார்க்கும் அல்லது உற்பத்தி செய்யும் ஆட்கள் பதிவு செய்யப்படுதல்.**

(2) அத்தகைய பதிவிற்கெனக் கட்டணம் ஒன்று அறவிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டணமானது விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் தம்மைப் பதிவு செய்துகொள்ள நாடும் ஆள் ஒவ்வொருவரும் —

(அ) ஏதேனும் நிறுவையை, அளவையை, அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தைப் பழுதுபார்ப்பதற்கு —

(i) அவர் பழுதுபார்க்க நாடும் வகையினதான நிறுவையை, அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தைப் பழுதுபார்ப்பதற்கு அவருக்குள்ள திறனை அல்லது அவரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களின் திறனைப் பணிப்பாளரின் திருப்திக்குச் செய்துகாட்டல் வேண்டும் ; அத்துடன்

(ii) அத்தகைய பழுதுபார்த்தலின் முறையான நிறைவேற்றலுக்கு தேவைப்படக்கூடியவாறான அத்தகைய சாதனங்களையும் கருவிகளையும் வேறு வசதிகளையும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் நிறுவையை, அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தை உற்பத்தி செய்வதற்கும்,

(i) அவர் உற்பத்தி செய்ய நாடும் வகையான நிறுவையை, அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தை உற்பத்தி செய்வதற்கு அவருக்குள்ள திறனை அல்லது அவரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களின் திறனைப் பணிப்பாளரின் திருப்திக்குச் செய்துகாட்டல் வேண்டும் ;

(ii) அத்தகைய நிறுவையொன்றின், அளவையொன்றின் அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணமொன்றின் உற்பத்திக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய சாதனத்தையும் கருவிகளையும் மற்றைய வசதிகளையும் உடைமையில் வைத்திருக்கல் வேண்டும் ; அத்துடன்

(iii) அவர் உற்பத்திசெய்யக் கருதும் அத்தகைய நிறுவையின், அளவையின் அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தின் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வரைபடங்களையும், மாதிரிகளையும் மாதிரி உருவ அங்கீகாரத்துக்கெனப் பணிப்பாளருக்கு அனுப்புதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் பதிவு செய்யப்படும் ஆளொவ்வொருவரும், அவரால் பழுதுபார்க்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் நிறுவை, அளவை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணம், விடயத்துக்கேற்றாற்போல, அத்தகைய உற்பத்திக்கு அல்லது பழுதுபார்ப்புக்குப் பின்னர் பரிசோதகரினால் பரிசோதிக்கப்படலும் சரிபார்க்கப்படலும் அல்லது பணிப்பாளரினால் திருத்தப்படலும் வேண்டும் என்னும் நிபந்தனைக்கமைந்தவராதல் வேண்டும். ஆள் ஒருவர் இந்நிபந்தனையை நிறைவேற்றத் தவறுமிடத்துப் பணிப்பாளர் அவரது பதிவை நீக்குதல் வேண்டும்.

(5) எவ்வாள் ஒருவரின் பதிவு (4) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளரினால் இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அவ்வாள், அத்தகைய இல்லாதாக்கலின் ஒரு மாதத்தினுள், அத்தகைய இல்லாதாக்கலுக்கெதிராக அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

நிறுவைகள் அல்லது அளவைகள் அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்கள் காலத்திற்கு காலம் பரிசோதனை செய்யப்படுதல்.

22. (1) ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அல்லது இடப்பரப்புக்குமான கண்காணிப்பாளர், அத்தகைய மாவட்டத்தினுள் அல்லது இடப்பரப்பினுள் ஒவ்வொரு பரிசோதகரும் நிறுவைகளை அல்லது அளவைகளை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களை எவ்விடங்களிலும் எத்திகதிகளிலும் பரிசோதிக்கவும் சரிபார்க்கவும் வேண்டுமோ அத்திகதிகளையும் இடங்களையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(2) நிறுவைகளினது அல்லது அளவைகளினது அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களினது பரிசோதனைக்காகவும் சரிபார்த்தலுக்காகவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட திகதியும் இடமும் பற்றிய அறிவித்தல், மாவட்டத்தின் கண்காணிப்பாளரினால் கொடுக்கப்படுதல் வேண்டும். அறிவித்தல் கொடுக்கப்படவேண்டிய முறையும் விதமும் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு பரிசோதகரும், இப்பிரிவின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அவரது முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்கள் எனப்படும் எல்லாச் சாதனங்களையும் பரிசோதித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மூன்றாந்தர நியமங்களினாலும், அந்நோக்கத்திற்குப் பொருத்தமானதெனவும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் நிபந்தனைகளுக்கு அமைவானதெனவும் அவர் கருதும் பரிசோதனைச் சாதனத்தினாலும் அல்லது ஏற்கனவே பரிசோதிக்கப்பட்டதும் இந்நோக்கத்திற்குப் பொருத்தமானதென அவர் கருதுவதுமான வேறு சாதனத்தினாலும் பரிசோதித்தலும் வேண்டும்.

(4) பரிசோதகர் ஒருவரை இப்பிரிவின்கீழ் நிர்ணயிக்கப்பட்டவொரு நேரம் அல்லது இடம் தவிர்ந்த வேறு ஏதேனும் நேரத்திலும் இடத்திலும் பரிசோதனைக்கென அவரது முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தைப் பரிசோதிப்பதை, ஒப்பிடுவதை அல்லது சோதிப்பதை (1) ஆம் உட்பிரிவில் உள்ள எதுவும் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது.

(5) பரிசோதகர் எவரும், அத்தகைய பரிசோதனைக்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியதன்மேல் தவிர, இப்பிரிவின்கீழ், ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தைப் பரிசோதித்தலாகாது.

சரிபார்த்தற் குறியைப் பொறித்தல்.

33. (1) பரிசோதனையின் மீது, ஏதேனும் நிறுவை அல்லது அளவை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணம் சரியாகவுள்ளதெனவும் அத்துடன், வேறுவகையில் இச்சட்டத்தினதும் இதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கு எல்லாவிதத்திலும் இணங்குகின்றதெனவும் காணும் பரிசோதகர் ஒருவர், அத்தகைய நிறுவைக்கு அல்லது அளவைக்கு அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்திற்கு விதித்துரைக்கப்பட்ட முறையில் சரிபார்த்தலுக்கென விதித்துரைக்கப்பட்ட குறியையும் விதித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் குறியையும் பொறித்தல் வேண்டும்; நிறுவை அல்லது அளவை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணம், அளவில் மிகச் சிறிதாக அல்லது பொறிக்கமுடியாதவொரு உலோகத்தினாலானதாக இருந்தால் மட்டும் பரிசோதகர் இப்பயன்பெற சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) பரிசோதகர் எவரும், விடயத்திற்கேற்றாற்போல சரியாக இராத அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டிற்கு அல்லது அத்தகைய நிறுவையினது அல்லது அளவையினது அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தினது விடயத்தில் ஏற்புடையதாகும் ஏதேனும் ஒழுங்குவிதிக்கு இணங்காத ஏதேனும் நிறுவைக்கு அல்லது அளவைக்கு அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்திற்கு சரிபார்த்தற் குறியைப் பொறித்தலாகாது.

(3) பரிசோதகர் எவரும், ஏதேனும் நிறுவைக்கு அல்லது அளவைக்கு —

(அ) அத்தகைய நிறுவை அல்லது அளவை அதிகாரமளிக்கப்பட்ட வகுப்பொன்றினைச் சேர்ந்ததாயிருந்தாலன்றி ; அத்துடன்

(ஆ) அந்த நிறுவையினது அல்லது அளவையினது மெய்த்தரத் திட்டமத்துடன் அவரால் ஒப்பிட்டுப் பரீட்சிக்கப்பட்டாலன்றி

சரிபார்த்தற் குறியைப் பொறித்தலாகாது.

ஏதேனும் அளவுகளுக் குட்புகுந்து நிறுவைகள் முதலியனவற்றைப் பரிசோதிப்பதற்கு பரிசோதகர்களுக்குள்ள தத்துவம்.

**24.** பரிசோதகர் ஒருவர், ஏதேனும் நியாயமான நேரத்தில் விடயத்திற்கேற்றாற்போல, அவரது பார்வையினுள் உள்ளதும், ஏதேனும் நிறுவை அல்லது அளவை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணம் ஏதேனும் வியாபார நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுவதும் அல்லது வைத்திருக்கப்படுவதாகச் சந்தேகிக்கப்படுவதும் அல்லது ஏதேனும் வியாபார நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவதும் அல்லது ஏதேனும் பொருள் ஏதேனும் வியாபார நோக்கத்துக்காகப் பொதியாக்கப்பட்டு வைத்திருக்கப்படுவதும் அல்லது வைத்திருக்கப்படுவதாகச் சந்தேகிக்கப்படுவதும் ஆன ஏதேனும் தொழிற்சாலையினுள், கடையினுள், களஞ்சியத்தினுள், கிட்டங்கியினுள், கொட்டிலினுள், காணியினுள், வளவினுள் அல்லது வாகனத்தினுள் பிரவேசித்து —

(அ) அதனுள் வைத்திருக்கப்படும் நிறுவைகள் அல்லது அளவைகள் அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் தேடலாம் அல்லது பரிசோதனைக்குச் சமர்ப்பிக்குமாறு அப்போதைக்கு அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளைத் தேவைப்படுத்தலாம்;

(ஆ) அங்கு காணப்படும் ஏதேனும் நிறுவையை அல்லது அளவையைப் பரிசோதிக்கலாம் அல்லது பரிசோதனைக்குக் காண்பித்து, அந்நிறுவையினதும் அளவையினதும் மூன்றாந்தர நியமத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்;

(இ) அங்கு காணப்படும் அல்லது பரிசோதனைக்கெனச் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் நிறுவையை அல்லது அளவையைப் பரிசோதிக்கலாம் அல்லது சோதிக்கலாம்:

(ஈ) ஒப்பிட்டுப் பார்த்ததன்மேல் அல்லது பரிசோதித்ததன்மேல் சரியற்றதாக அல்லது தவறானதாகக் காணப்படும் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகப் பயன்படுத்தப்பட்டதாக அல்லது பயன்படுத்தப்படவுள்ளதாகப் பரிசோதகருக்குத் தோன்றும் ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தை இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் கீழான தவறொன்றிற்காகக் குற்றவழக்குத் தொடுக்கும் நோக்கத்திற்கெனக் கைப்பற்றலாம் என்பதுடன், தடுத்தும் வைக்கலாம்; அத்துடன்

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிவதற்காக அங்கு வைத்திருக்கப்படும் விற்கமுனையப்படும் அல்லது விற்பனைக்கென வெளிக்காட்டி வைக்கப்பட்டிருக்கும் ஏதேனும் பொருளைப் பரிசோதித்து நிறுக்கலாம் அல்லது பரிசோதித்து அளக்கலாம் என்பதுடன், எப்பொருள் தொடர்பாக அல்லது எப்பொருள் சார்பாக இச்சட்டத்தின் ஏற்பாடெதுவும் மீறப்பட்டுள்ளதோ அல்லது மீறப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்டுள்ளதோ அப்பொருளைக் கைப்பற்றித் தடுத்து வைக்கலாம்.

பரிசோதகரால் பொறிப்பிடப்பட்ட நிறுவை அல்லது அளவை முதலியன இலங்கையில் பயன்படுத்தப்படுதல்.

25. விதித்துரைக்கப்பட்ட சரிபார்த்தற் குறியினால் இச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின்கீழ் பரிசோதகரால் முறையாகப் பொறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிறுவையும் அல்லது அளவையும் அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணமும் அதன்பின்னர் அது பொய்யானதென அல்லது சரி பற்றதெனக் காணப்பட்டாலொழிய இலங்கையின் எப்பாகத்திலும் பயன்படுத்தப்படலாம்.

அறவிடப்படும் கட்டணங்கள், நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

26. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் அளவீட்டு உபகரணத்தை அளவு திருத்துவதற்கெனப் பணிப்பாளரினால் அறவிடப்பட வேண்டிய எல்லாக் கட்டணங்களும் நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

பரிசோதகர்கள் பதிவேடுகள் வைத்திருத்தல் வேண்டும்.

27. பரிசோதகர் ஒவ்வொருவரும், பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான இச்சட்டத்தின் கீழான அவரின் கடமைகளை நிறைவேற்றல் தொடர்பிலான அத்தகைய பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், பணிப்புரையில் கூறப்பட்டுள்ளவாறான அத்தகைய நேரங்களில், பரிசோதனைக்கென அத்தகைய பதிவேடுகளைப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

பரிசோதகர்கள் பிணை கொடுத்தல் வேண்டும்.

28. (1) பரிசோதகர் ஒருவராக நியமிக்கப்படும் ஆளொவ்வொருவரும் நியமிக்கப்பட்டதன்மேல் உடனடியாக அவரது பதவியின் கடமைகளை முறைப்படி நிறைவேற்றுவதற்கும் இச்சட்டத்தின்கீழ் அவரால் பெறப்பட்ட எல்லாக் கட்டணங்களையும் முறைப்படி செலுத்துவதற்கும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரிடம் பொறுப்பிக்கப்பட்ட மூன்றாந்தர நியமங்களினதும், இலச்சினைகளினதும், வேறு சாதனங்களினதும் பாதுகாப்பிற்கும் என விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையைப் பிணையாகக் கொடுத்தல் வேண்டும்.

(2) பரிசோதகர் ஒருவர் பணிப்பாளரினால் நியமிக்கப்படுமிடத்து, அப்பரிசோதகரினால் கொடுக்கப்படவேண்டுமென (1) ஆம் உட்பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட பிணையானது, பகிரங்க அலுவலர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின்கீழ் கொடுக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

ஏதேனும் பொருட்களை நிறுத்தலையும் அளத்தலையும் செவ்வை பார்ப்பதற்கென ஏதேனும் வளவுகளுக்குள் புகுவதற்கு பொலிசு அலுவலர்களுக்கு அல்லது விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களுக்கு உள்ள தத்துவம்.

29. உப பொலிசு பரிசோதகரின் அல்லது எவரேனும் விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகரின் தரத்துக்குக் குறையாத தரத்திலுள்ள எவரேனும் பொலிசு அலுவலர் —

(அ) இலங்கையிலுள்ள ஏதேனும் இடத்தில் அல்லது இடப்பரப்பில் ஏதேனும் வியாபார நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் வளவுகளுக்குள் புகுவதற்கும் கொள்வனவு செய்பவர் ஒருவரிடம் பொருட்களை ஒப்படைக்கும் நோக்கத்திற்காக செய்யப்படும் அல்லது செய்யப்பட்டுள்ள ஏதேனும் நிறுத்தலையும் அளத்தலையும் செவ்வை பார்ப்பதற்கும்;

(ஆ) இச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின்கீழான தவறொன்று தொடர்பிலான ஏதேனும் குற்றவழக்குத் தொடர்ச்சியின் நோக்கத்திற்கு அவசியமாகுமிடத்து, சொல்லப்பட்ட பிரிவுக்கு முரணாக அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஏதேனும் பொருட்களைக் கைப்பற்றித் தடுத்துவைப்பதற்கும்,

தத்துவமுடையவராதல் வேண்டும்.

## பாகம் V

### மற்றைய நியதிச்சட்டமுறையான அளவீடுகள்

ஏதேனும் அளவையினை அல்லது அளக்கும் உபகரணத்தை காலத்துக்குக் காலம் சரிபார்த்தலை அல்லது உறுதிப்படுத்தலை அமைச்சர் பணித்தல்.

30. (1) அமைச்சரானவர், காலத்திற்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் பணிப்புரையொன்றின் மூலம் உடல்நலத்தினைப் பாதுகாப்பதில் எவரேனும் ஆளைப் பாதுகாப்பதில் நிரப்பினை கட்டுப்படுத்துவதில் அல்லது சூழலைப் பாதுகாப்பதில் பயன்படுத்தப்படும் ஏதேனும் அளவை அல்லது அளக்கும் உபகரணம், அல்லது கைத்தொழிலில் அல்லது தரக் கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படும் ஏதேனும் அளவை, காலத்துக்குக் காலம் சரிபார்க்கப்படுவதற்காக அல்லது உறுதிப்படுத்தப்படுவதற்காக பணிப்புரையில் தரப்பட்டுள்ள அத்தகைய முறையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தலாம். அவ்வாறு காலத்துக்குக்காலம் சரி பார்த்தலை அல்லது உறுதிப்படுத்தலை நிறைவேற்றுதற்கென விதித்துரைக்கப்பட்டவாறான கட்டணம் ஒன்றுமறவிடப்படலாம்.

(2) பணிப்புரையொன்று, (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்படுமிடத்து, அத்தகைய அளவைகளுக்கும் அளக்கும் உபகரணங்களுக்குமான குறிப்பீடுகளும் அனுமதிக்கப்பட்ட இசைவளவுமதிகளும் அவற்றைப் பரிசோதிக்கும் முறைகளும் விதித்துரைக்கப்பட்டவாறாயிருத்தல் வேண்டும்.

31. உறுதிப்படுத்தும் அல்லது அளவுதிருத்தும் நோக்கத்திற்காக, அல்லது ஏதேனும் சட்டமுறையான நோக்கத்திற்கென ஏதேனும் அளவீட்டை செவ்வைபார்க்கும் நோக்கத்திற்காக, ஏதேனும் அளக்கும் உபகரணத்தைப் பரிசோதிப்பதற்கு அல்லது செவ்வை பார்ப்பதற்கு அளவை யொன்றை அல்லது அளக்கும் உபகரணம் ஒன்றைப் பயன்படுத்தும் அரசாங்கம் அல்லது அரசாங்கத் திணைக்களம் ஒவ்வொன்றும், அந்நோக்கத்திற்கெனக் கசெற்றில் வெளியிடப்படும் பணிப்பொன்றினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடைவெளிகளில் அத்தகைய அளவையை அல்லது அளக்கும் உபகரணத்தை, ஆய்வுகூடத்தில் அளவு திருத்தச்செய்தல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்களினால் அல்லது கூட்டுத்தாபனங்களினால் பயன்படுத்தப்படும் அளவை அல்லது அளக்கும் உபகரணம், ஆய்வுகூடத்தில் அளவு திருத்தப்படுதல் வேண்டும்.

32. காணியின் கைமாற்றம் தொடர்பான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களிலும் காணியின் அளவெல்லை ஒவ்வொன்றினதும் அளவீடானது இதற்கான இரண்டாம், மூன்றாம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீட்டு அலகுகளுக்கு இணங்க இருத்தல் வேண்டும் :

ஆயினும், கைமாற்றமானது அளவீடு செய்யப்பட்ட அல்லது 1983 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதிக்கு முந்திய திகதியொன்றிலான உறுதியொன்றில் விவரிக்கப்பட்ட எல்லைகளைக்கொண்ட காணி தொடர்பானதாயிருக்கும்போது, இதற்கான இரண்டாம், மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலகு ஒன்றுடன் அதே அளவுக்குத் தொடர்புபடுத்திப்பார்த்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்கமைவாக, உறுதியில் அவ்வாறு பயன்படுத்தப்பட்ட அளவீட்டு அலகுடன் தொடர்புபடுத்தலாம். ஒவ்வொரு மாற்றங்களும் அந்நோக்கத்திற்கென ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்டுள்ள மாற்றக் காரணிகளைப் பயன்படுத்தி அடையப்பெறுதலாகும் ;

ஆயின், மேலும், காணியின் அளவெல்லையானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மரபுவழி அலகுகளில் விவரிக்கப்படுமிடத்து அத்தகைய மாற்றமானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அவசியமாகாது.

காணி தொடர்பான கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தப்பட வேண்டிய அளவீட்டு அலகுகள்.

## பாகம் VI

## கைத்தொழில் முதலியவற்றுக்கான அளவீடு

33. பணிப்பாளரானவர், கைத்தொழிலில், பொதிப்பத்துறையில் அல்லது வேறு ஏதேனும் துறையில் பயன்படுத்தப்படும் நிறைகளை அல்லது அளவைகளை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களை அளவு திருத்துவதற்கு அவசியமானதென அவர் கருதும் அத்தகைய வசதிகளுக்கு ஏற்பாடுசெய்தல் வேண்டும். அத்தகைய அளவுதிருத்தல்கள் எல்லாம், ஆய்வுகூடத்தினால் பேணப்படும் இலங்கை நியமம் ஒன்றினை அல்லது குறிப்பீட்டு நியமம் ஒன்றினைப் பின்பற்றியதாக இருத்தல் வேண்டும்.

அளக்கும் உபகரணங்களையும் அளக்கும் கருவிகளையும் அளவு திருத்துவதற்கான வசதிகளுக்குப் பணிப்பாளர் ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

வியாபாரத்தில் அல்லது கைத்தொழில் பயன்படுத்தப்படும் நிறுவைகள், அளவைகள் முதலியனவற்றின் மாதிரி உரு, ஆய்வுகூடத்தினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

**34.** கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் எல்லா நிறுவைகளினதும் அளவைகளினதும் அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களினதும் மாதிரி உரு, உற்பத்தி செய்யப்படுவதற்கு அல்லது இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்னர் ஆய்வுகூடத்தில் அங்கீகரிக்கப்படல் வேண்டும். அமைச்சரானவர், வேறு ஏதேனும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் அளக்கும் உபகரணங்கள் தொடர்பான மாதிரி உரு அங்கீகரிக்கப்படவேண்டுமென்ற தேவைப்பாடுகளை விதித்தற்குத் தத்துவம் உடையவராதல் வேண்டும்.

## பாகம் VII

### நிதியம்

நிதியம்.

**35.** (1) இச்சட்டத்தின் நோக்கத்திற்கென அமைச்சரின் அமைச்சின் செயலாளரினால் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் பேணப்படவேண்டிய நிதியம் ஒன்று தாபிக்கப்படல் வேண்டும்.

(2) அறவிடப்பட்டதும் விதித்துரைக்கப்பட்டதுமான கட்டணம் ஒவ்வொன்றினதும் மூன்றில் இரண்டு பங்கு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும். கட்டணம் ஒவ்வொன்றினதும் மிகுதி மூன்றில் ஒரு பங்கு திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) நிதியத்திலிருந்து—

(அ) சட்டமுறையான மீற்றர் அளவைமுறை ஆய்வுச் சர்வதேச தாபனத்தின் ஓர் உறுப்பினராக ஆகு என்ற முறையில் ஆண்டுக் கொடுப்பனவுகளாகவும் வேறு கொடுப்பனவுகளாகவும் செலுத்தப்படும் எல்லாப் பணத்தொகைகளும் அதன் கூட்டங்களில் பங்குபற்றுவதனால் உறப்படும் செலவினங்களும்;

(ஆ) அளவையியல் நியமங்களின் உள்ளொப்பீட்டுக்கான சர்வதேச அல்லது பிராந்திய நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுதலினால் உறப்பட்ட செலவுகள் உட்பட இலங்கைக் குறிப்பீடுகளினதும், இரண்டாந்தர அல்லது மூன்றாந்தர நியமங்களினதும் அளவு திருத்துதலில் உறப்பட்ட எல்லாச் செலவுகளும்;

(இ) அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் திணைக்களத்தையும் ஆய்வுகூடத்தையும், நியமங்கள் பேணப்படும் மற்றெல்லா அலுவலகங்களையும் பேணும் செலவினங்களில் உறப்படும் எல்லாச் செலவு தொகைகளும்;

(ஈ) நாற்பத்தேழாம் பிரிவின்கீழ் எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு வெகுமதிகளாகச் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்;

(உ) அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் திணைக்களத்திலும் ஆய்வுகூடத்திலும் பயன்படுத்தப்படும் பொறித்தொகுதியையும் சாதனங்களையும் வாகனங்களையும் பேணுவதில் உறப்பட்ட எல்லாச் செலவுகளும்;

(ஊ) இருபத்துநான்காம் பிரிவின்கீழ் நிறுவைகளையும் அளவைகளை யும் நிறுக்கும், அளக்கும் உபகரணங்களையும் சோதிப்பதற்கும் சரிபார்ப்பதற்குமான வசதிகளை ஏற்பாடுசெய்வதில் உறப் பட்ட எல்லாச் செலவுகளும்;

(எ) இச்சட்டத்தின் V ஆம், VI ஆம் பாகங்களின்கீழ் அளவு திருத்து வதற்கும், 20 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் நிறுவையினதும், அள வையினதும், நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தினதும் மாதிரி உருவைப் பரிசோதிப்பதற்கும் ஏற்பாடுசெய்வதில் உறப் படும் எல்லாச் செலவுகளும்; அத்துடன்

(ஏ) அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் திணைக்களத் தினதும் ஆய்வுகூடத்தினதும் முறையான முகாமைக்கும் நிர் வாகத்திற்கும் இடைநேர்விளைவான எல்லாச் செலவுகளும்

செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரின் அமைச்சின் செயலாளரானவர், ஒவ்வொரு நிதியாண் டும் முடிவுற்றதன்பின்னர் இயன்றளவு விரைவாக, நிதியத்தின் நிருவாகம் பற்றிய அறிக்கை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், ஒவ் வொரு நிதியாண்டு தொடர்பிலும் நிதியத்தின் முழுமையானதும் தோதானதுமான கணக்கொன்றைப் பேணிவரச்செய்தலும் வேண்டும்.

(5) கணக்காய்வாளர் தலைமையதிபதி, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கிணங்க நிதியத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் வேண்டும்.

(6) நிதியத்தின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

## பாகம் VIII

### தவறுகளும் தண்டங்களும்

36. பரிசோதகர் ஒருவரினால், விதித்துரைக்கப்பட்ட சரிபார்த்தல் குறியினால் இலச்சினையிடப்படாத ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தை விற் பனை செய்யும் அல்லது விற்பனைக்காக வெளிக்காட்டிவைக்கும் ஆளெவ ரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதி வானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற் கான மறியற்றண்டனைக்கு, அல்லது குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

இலச்சினை யிடப்படாத ஏதேனும் நிறுவை முதலி யனவற்றை விற்பனை செய் தல் அல்லது விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தல்.

இலச்சினை யிடப்படாத நிறுவைகள் முதலியன வற்றின் பயன்பாடும் உடைமையும்.

37. பரிசோதகர் ஒருவரினால், சரிபார்த்தலுக்கு என விதித்துரைக்கப்பட்ட குறியினால் அத்தகைய நேரத்துக்கு உடன்முன்னரான பன்னிரண்டு மாத காலப்பகுதியில் இலச்சினையிடப்படாத, ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தை ஏதேனும் வியாபார நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் அல்லது ஏதேனும் வியாபாரத்தில் பயன்படுத்துவதற்கெனத் தனது உடைமையில் வைத்திருக்கும் ஆளெவரும், தவறொன்றிற்குக் குற்றவாளியாதல்வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பரிசோதகர்களினால் பயன்படுத்தப்பட்ட இலச்சினையை அல்லது குறியைப் போலி புனைதல்.

38. (அ) நிறுவைகளை அல்லது அளவைகளை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களை இலச்சினையிடுவதற்கென பரிசோதகர்களின் பயன்பாட்டிற்காக இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்படும் ஏதேனும் இலச்சினையை அல்லது குறியைப் போலி புனையும் அல்லது மோசடியாக ஆக்கும்; அல்லது

(ஆ) பொய்யானது போலி புனையப்பட்டது அல்லது மோசடியாக ஆக்கப்பட்டதென அவர் அறிந்த ஏதேனும் இலச்சினையை அல்லது குறியைக்கொண்ட ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தை ஆக்கும், பயன்படுத்தும், விற்பனை செய்யும், விற்பனைக்காக வெளிக்காட்டிவைக்கும், விற்பனைக்கெனக் கூறும் அல்லது வியாபாரத்தில் பயன்படுத்துவதற்கென வளவுகளில் வைத்திருக்கும் அல்லது வேறு வகையாகக் கொடுத்துத்தீர்க்கும் ; அல்லது

(இ) பரிசோதகர் ஒருவரால் ஏதேனும் நிறுவையில் அல்லது அளவையில் அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தில் இலச்சினையிடப்பட்டுள்ள குறியெதனையும் அகற்றி அத்தகைய குறியை வேறு ஏதேனும் நிறுவையில் அல்லது அளவையில் அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தில் புகுத்தும் ; அல்லது

(ஈ) இச்சட்டத்தின்கீழ் பரிசோதகர் ஒருவரால் இலச்சினையிடப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட ஒரு நிறுவையை அல்லது அளவையை, கூட்டும் அல்லது குறைக்கும் அல்லது இச்சட்டத்தின்கீழ் பரிசோதகர் ஒருவரால் இலச்சினையிடப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட ஒரு நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தில் மாற்றம் உண்டுபண்ணும் அல்லது குறைக்கப்பட்டது அல்லது பொய்யானது என அவர் அறிந்த ஏதேனும் நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தை அல்லது மாற்றத்

செய்யப்பட்டதென அவர் அறிந்த, நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தைப் பயன்படுத்தும், விற்கும் விற்பனைக்கென வெளிக்காட்டி வைக்கும், விற்பனைக்கெனக் கூறும், வியாபாரமொன்றில் பயன்படுத்துவதற்கென அவரது உடைமையை வைத்திருக்கும் அல்லது வேறுவகையில் கொடுத்துத் தீர்க்கும்,

ஆளெவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

நீளம் அல்லது கொள்ளளவு பற்றிய பொய்யான நிறுவையை அல்லது அளவையைப் பயன்படுத்தல்.

39. பொய்யான ஏதேனும் நிறுவையை அல்லது பொய்யான ஏதேனும் நீள அல்லது கொள்ளளவு அளவையைப் பயன்படுத்துபவர் அல்லது ஏதேனும் நிறுவையை அல்லது நீள அல்லது கொள்ளளவு அளவையை அதிலிருந்து வித்தியாசமான ஒரு நிறுவையாக அல்லது அளவையாகப் பயன்படுத்துபவர் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டிற்கு மேற்படாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பதிவுசெய்யப்படாததான ஏதேனும் நிறுவை அல்லது அளவை அல்லது முதலியவற்றைப் பழுதுபார்த்தல் அல்லது உற்பத்தி செய்தல்.

40. இருபத்தோராம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பணிப்பாளரினால் பதிவுசெய்யப்படாததான ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தைப் பழுதுபார்க்கும் அல்லது உற்பத்திசெய்யும் ஆளெவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறுமாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பரிசோதனைக்கென நிறைகள் முதலியனவற்றை சமர்ப்பிக்க மறுத்தல்.

41. பரிசோதகர் ஒருவர் 24 ஆம் பிரிவின்கீழ் அவருக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகிக்கையில் தேவைப்படுத்தும்போது ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தை அவருக்குக் காண்பிக்க மறுக்கும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டாயிரத்தைந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டிற்கு மேற்படாத ஒரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பொய்யான, பிழையான அல்லது உண்மையற்ற வெளிப்படுத்துகை அல்லது கூற்று முதலியன.

42. ஏதேனும் இடத்தில் அல்லது இடப்பரப்பில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ எத்தகையதான எவ்வகையிலேனும் எவையேனும் பொருட்களினது அல்லது சாமான்களினது எண்ணிக்கை, கனியம், அளவு, மாஸ் அல்லது நிறைபற்றி, அவற்றின் கொள்வனவு, விற்பனை, நிறுவை அல்லது அளவீடு தொடர்பாக அல்லது நிறுவையின் அல்லது அளவையின் அடிப்படையில் வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்கள் எவற்றையும் கணிப்பதில் ஏதேனும் பொய்யான, பிழையான அல்லது உண்மையற்ற வெளிப்படுத்துகையை அல்லது கூற்றைக் கூறும் ஆளெவரும், அல்லது கொள்வனவுகாரர் ஒருவருக்கு, அவரால் கோரப்பட்ட அளவிலும் குறைவாக அல்லது விற்பவரால் கூறப்பட்ட அளவிலும் குறைவாக நிறுவை மூலம் அல்லது அளவைமூலம் எதனையும் விற்கும் அல்லது விற்கச்செய்யும், அல்லது ஒப்படைக்கும் அல்லது ஒப்படைக்கச்செய்யும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டாயிரத்தைந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பிழையான ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை பயன்படுத்தல் அல்லது உடைமையில் வைத்திருத்தல்.

43. பிழையான ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தை ஏதேனும் வியாபார நோக்கத்திற்காகப் பயன்படுத்தும் அல்லது ஏதேனும் வியாபாரத்தில் பயன்படுத்துவதற்காக உடைமையில் வைத்திருக்கும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டாயிரத்தைந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கும் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்காக மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பரிசோதகர்களால் செய்யப்படும் மீறுகை.

44. நான்காம் பாகத்தின் அல்லது ஏதேனும் நிறுவையை, அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தைப் பரிசோதித்தல், சரிபார்த்தல் அல்லது இலச்சினையிடல் தொடர்பான ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடெதனையும் மீறும் பரிசோதகர் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டாயிரத்தைந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

45. முப்பதாம் பிரிவின்கீழ் அமைச்சரினால் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றின்படி அளவையொன்றை அல்லது அளக்கும் உபகரணமொன்றை அளவுதிருத்தச் செய்யத் தவறும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். 30 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு இணங்கத் தவறல்.

46. தண்டனை எதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படாத, இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினை அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாட்டினை மீறும் ஆளெவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும். பொதுவான தண்டனை.

47. நீதிமன்றமெதுவும், ஏதேனும் நிறுவை அல்லது அளவை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணம் தொடர்பாக, இச்சட்டத்தின் கீழ் எவரேனும் ஆள் தவறொன்றுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், அத்தகைய நிறுவை அல்லது அளவை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணம் அரசிற்குப் பறிமுதல் செய்யப்படவேண்டுமென வெளிப்படுத்திக் கட்டளையிடலாம் ; அத்துடன் அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவையும் அளவையும் அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணமும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் விற்பனை செய்யப்படுதல் வேண்டும். நிறுவைகள் முதலியனவற்றைப் பறிமுதல் செய்தல்.

48. இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென, ஏதேனும் வியாபாரத்தினைக் கொண்டுநடாத்தும் ஆள் எவரதும் உடைமையில், அல்லது வியாபார நோக்கங்களுக்கென எவரேனும் ஆளால் பயன்படுத்தப்படும் ஏதேனும் வளவுகளில் காணப்படும் ஏதேனும் நிறுவை அல்லது அளவை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணம், மாறானது என எண்பிக்கப்படும்வரை வியாபாரப் பயன்பாட்டிற்கென அவ் ஆளால் உடைமையில் வைத்திருக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். உடைமை பற்றிய சான்று.

49. இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறுக்காக, அத்தகைய தவறு எந்த மாவட்டத்தினுள் அல்லது இடப்பரப்பினுள் புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்டுள்ளதோ அம்மாவட்டத்தின் அல்லது இடப்பரப்பின் அளவீட்டு அலகுகளினதும், நியமங்களினதும், சேவைகளினதும் கண்காணிப்பாளரின் எழுத்திலான அனுமதியினால் அல்லது அனுமதியுடனன்றி எவரேனும் ஆளுக்கெதிராக குற்றவழக்கெதுவும் தொடரப்படலாகாது. குற்றவழக்கிற்கான அனுமதி.

## பாகம் IX

### பொது

உதவிப் பணிப்பாளர்களினாலும் கண்காணிப்பாளர்களினாலும் உள்ளூர் விசாரணைகள் செய்யப்படுதல்.

50. (1) பணிப்பாளரானவர், இச்சட்டத்தின் நிருவாகம் தொடர்பாக, இலங்கையில் எவ்விடப்பரப்பிலாயினும் விசாரணையொன்றினை நடாத்துமாறு எவரேனும் அளவீட்டு அலகுகளினதும், நியமங்களினதும், சேவைகளினதும் உதவிப் பணிப்பாளரை அல்லது அளவீட்டு அலகுகளினதும் நியமங்களினதும், சேவைகளினதும் கண்காணிப்பாளரைக் காலத்திற்குக் காலம் பணிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விசாரணை எதனையும் ஏதேனும் இடப்பரப்பில் நடாத்துமாறு எவரேனும் அத்தகைய உதவிப் பணிப்பாளர் அல்லது அத்தகைய கண்காணிப்பாளர் பணிக்கப்படுமிடத்து, அவர்—

(அ) அத்தகைய இடப்பரப்புக்கு அல்லது அதன் பாகமாயமையும் ஏதேனும் பிரிவுக்கு நியமிக்கப்பட்ட பரிசோதகர்களின் பயன்பாட்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட தொழிற்பாட்டிலுள்ள நியமங்களையும் நிறுக்கும், அளக்கும் உபகரணங்களையும் பரிசோதித்தல் வேண்டும்;

(ஆ) நிறுவைகளையும் அளவைகளையும் நிறுக்கும், அளக்கும் உபகரணங்களையும் அந்த இடப்பரப்பில் பரிசோதிக்கையிலும் சரிபார்க்கையிலும் பின்பற்றப்படும் நடைமுறைபற்றி விசாரணை செய்தல் வேண்டும்; அத்துடன்

(இ) பணிப்பாளர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு புலனாய்வுகளையும் செய்தல் வேண்டும்.

(3) ஏதேனும் இடப்பரப்பில் நடாத்துமாறு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஏதேனும் விசாரணையின் நோக்கத்திற்காக, அத்தகைய விசாரணையை நடாத்துமாறு (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணிக்கப்பட்டுள்ள அலுவலர், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் பரிசோதகர் ஒருவருக்கு அளிக்கப்பட்டுள்ள எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தல் வேண்டும் என்பதுடன் பிரயோகிக்கலாம்.

குறித்துரைக்கப்பட்ட பொதியாக்கப்பட்ட பொருள்கள் பற்றியதும், ஏதேனும் பொதியிலடங்கியிருக்க வேண்டிய அளவு பற்றியதுமான வெளிப்படுத்துகை.

51. (1) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், எவையேனும் பொருட்களை, இப்பிரிவின் நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட பொதியாக்கப்பட்ட பொருட்கள் என வெளிப்படுத்தலாம் (இவை இதனகத்துப்பின்னர் "குறித்துரைக்கப்பட்ட பொதியாக்கப்பட்ட பொருட்கள்" எனக் குறிப்பிடு செய்யப்படும்).

(2) எவரேனும் பொதியாக்குனரினால், அல்லது இறக்குமதியாளரினால் பொதியொன்றிலடங்கியுள்ள எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பொதியாக்கப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுமிடத்து, அத்தகைய பொதியாக்குனர் அல்லது இறக்குமதியாளர் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

(3) பணிப்பாளரானவர், குறித்தசில குறித்துரைக்கப்பட்ட பொதியாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக, ஏதேனும் பொதியில் கொண்டிருக்கப்படவேண்டிய அளவைக் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் வெளிப்படுத்தலாம்; அத்துடன் மற்றெல்லாக் குறித்துரைக்கப்பட்ட பொதியாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாகவும், பொதியொன்றில் கொண்டிருக்கப்படவேண்டிய அளவு, விடயத்துக்கேற்றாற்போன்று ஒரு பொதியாக்குனரினால் அல்லது ஓர் இறக்குமதியாளரால் தீர்மானிக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

(4) அத்தகைய பொதியானது—

(அ) அடங்கியுள்ள அதிகாரமளிக்கப்பட்ட அலகுகளிலான ஒன்றில் நிறையின், அல்லது கனவளவின் அல்லது நீட்டளவையின் கனியம் பற்றிய கூற்றொன்றுடனும், அத்துடன்

(ஆ) பரிசோதகர் ஒருவரால் அவரது பெயரையும் முகவரியையும் உடனடியாகக் கண்டறிய இயலக்கூடியதாக அவரின் பெயருடனும் முகவரியுடனும் அல்லது அடையாளம் ஒன்றுடனும்,

விதித்துரைக்கப்பட்ட விதத்தில் குறியீடிடப்பட்டுள்ளதென உறுதிப்படுத்துவது எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பொதியாக்கப்பட்ட பொருட்களின் பொதியாக்குனரொருவராக அல்லது இறக்குமதியாளரொருவராகவுள்ள ஆளெவரினதும் கடமையாதல் வேண்டும்.

(5) அமைச்சரானவர், இலங்கையில் பொதியாக்கப்பட்டதாயினுஞ்சரி, இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டதாயினுஞ்சரி, குறித்துரைக்கப்பட்ட பொதியாக்கப்பட்ட பொருட்கள் எவற்றையும் கொண்டிருக்கின்ற ஏதேனும் பொதியில் அடங்கியுள்ள அளவின் செம்மைபற்றித் தீர்மானிப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய முறைகளையும் சோதனைகளையும் ஒழுங்குவிதிகள்மூலம் தீர்மானித்தல் வேண்டும்.

(6) எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பொதியாக்கப்பட்ட பொருட்களின் பொதியாக்குனரான அல்லது இறக்குமதியாளரான எவ் ஆள்—

(அ) பொதியிலுள்ள கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான அளவைவிடக் குறைவான அளவைக் கொண்டிருக்கின்ற எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பொதியாக்கப்பட்ட பொருட்களைப் பொதியாக்குகின்றாரோ அல்லது இறக்குமதி செய்கின்றாரோ, அல்லது

(ஆ) ஏதேனும் பொதியில் அது கொண்டிருக்கும் அளவை அதிகாரமளிக்கப்பட்ட அலகுகளில் குறியீடிடத்தவறுகின்றாரோ, அவ்வாறெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாத காலத்திற்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**அதிகாரமளிக்கப்பட்ட அலகுகளில் குறிப்பிடப்படாத பொதிபாக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல் தவிர்க்கப்படுதலும்.**

52. அதிகாரமளிக்கப்பட்ட அலகுகளில் அளவானது அதன்மீது குறிப்பிடப்படாத எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பொதிபாக்கப்பட்ட பொருட்களடங்கியுள்ள பொதியொன்றை விற்பனை செய்யும் அல்லது விற்பனைக்காக வெளிக்காட்டி வைக்கும் ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் குற்றவாளியாதல் வேண்டும்.

**பிணக்குகளைத் தீர்த்தல்.**

53. ஏதேனும் நிறுவையை அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தைப் பரிசோதிப்பதில் கையாளப்பட வேண்டிய முறைகள் பற்றி, பரிசோதகர் ஒருவருக்கும் வேறு எவரேனும் ஆளுக்குமிடையில் பிணக்கு ஏதுவும் எழின், அத்தகைய பிணக்கானது, அத்தகைய பரிசோதகரது அல்லது அத்தகைய வேறு ஆளினது வேண்டுகோளின்மீது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படல் வேண்டும் என்பதுடன், பணிப்பாளரின் முடிவானது இறுதியானதாகவும் முடிவானதாகவும் வேண்டும்.

**பணிப்பாளரினது பிரதிப் பணிப்பாளரினது அல்லது உதவிப் பணிப்பாளரினது அத்தாட்சிப் பத்திரம், அதனகத்துக் குறிப்பிட்டுள்ள நிகழ்வுகள் பற்றிய முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.**

54. பணிப்பாளரினால், பிரதிப் பணிப்பாளரினால் அல்லது ஓர் உதவிப் பணிப்பாளரினால், பரிசோதிக்கப்பட்ட ஏதேனும் நிறுவையினது அல்லது அளவையினது அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தினது நிலைமை பற்றி வழங்கப்பட்டதாகக் கருதப்படும் சான்றிதழொன்று, மேலதிக எண்பிப்பின்றி, நீதிமன்றமெதிலும் சான்றாக அனுமதிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அது அதனகத்துக் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் பற்றிய முதற்றோற்ற எண்பிப்பாதலும் வேண்டும்.

**ஊழியர்களினதும் முகவர்களினதும் தவற்றுக்கு முதல்வர் பொறுப்பாதல் வேண்டும்.**

55. எவரேனும் உற்பத்தியாளரின் அல்லது வர்த்தகரின் முகவர் ஒருவரால் அல்லது ஊழியர் ஒருவரால் இச்சட்டத்தின்கீழ் தவறு எதுவும் புரியப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய தவறு அவரது அறிவின்றிப் புரியப்பட்டதாக அவர் எண்பித்தாலொழிய அத்தவறானது அத்தகைய உற்பத்தியாளரினால் அல்லது வர்த்தகரினால் புரியப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**ஆட்கள் குழுவினால் புரியப்பட்ட தவறுகள்.**

56. இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது —

(அ) அவ் ஆட்கள் குழு, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயிருப்பின் அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவராக அல்லது அலுவலர் ஒருவராக இருந்த ஆளொவ்வொருவரும்; அல்லது

(ஆ) அவ் ஆட்கள் குழு, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றல்லாத குழுவொன்றாயிருப்பின், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் உறுப்பினர் ஒருவராக இருந்த ஆளொவ்வொருவரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயிருப்பினும், அத்தகைய பணிப்பாளர், அலுவலர் அல்லது உறுப்பினர் அத்தவறு அவரது அறிவின்றிப் புரியப்பட்டதென அல்லது அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குத் தக்க விழிப்புணர்வை அவர் பிரயோகித்தாரென எண்பித்தால், அவர் அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

57. இச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆள், ஏதேனும் தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அல்லது ஏதேனும் பொருள் கைப்பற்றப்பட்டு இச்சட்டத்தின்கீழ் பறிமுதல் செய்யப்படவேண்டுமெனக் கட்டளையிடப்படுமிடத்து, பணிப்பாளரானவர் — குறித்த சில ஆட்களுக்கு வெகுமதிகள்.

(அ) அத்தகைய குற்றத்தீர்ப்புக்கு அல்லது அத்தகைய பொருள் கைப்பற்றப்படுவதற்கும் பறிமுதல் செய்யப்படுவதற்கும் காரணமான தகவலைக் கொடுத்த ஆளுக்கும் அல்லது ஆட்களுக்கும் ;

(ஆ) அத்தகைய தவறைக் கண்டுபிடிப்பதில் அல்லது அத்தகைய பொருளைக் கைப்பற்றுவதிலும் பறிமுதல் செய்யப்படுவதிலும் சம்பந்தப்பட்டுள்ள எவரேனும் ஆளுக்கும், அவர் நியாயமானதெனக் கருதும் அத்தகைய வெகுமதியைக் கொடுக்கலாம்.

58. (1) தண்டனைச் சட்டக்கோவையின் (அத்தியாயம் 19) 257 ஆம், 258 ஆம், 259 ஆம், 260 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன. 19 ஆம் அத்தியாயத்தின் 257 ஆம், 258 ஆம், 259 ஆம், 260 ஆம் பிரிவுகளை நீக்குதலும் பேணல்களும்.

(2) மேற்கூறப்பட்ட பிரிவுகள் நீக்கப்பட்டமை எவ்விதமாயிருப்பினும் நியமிக்கப்பட்ட திகதியில் ஏதேனும் முதல்நிலை அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், நீக்கப்பட்ட பிரிவுகளின்கீழ் ஏற்கனவே தொடரப்பட்டு முடிவுறாதிருக்கும் குற்றவழக்கு அல்லது தொடர்ச்சி ஒவ்வொன்றும் சொல்லப்பட்ட, நீக்கப்பட்ட பிரிவுகளின்கீழ் இறுதித்தீர்ப்பளிக்கப்படும்வரை தொடர்ந்து நடாத்தப்படுதல் வேண்டும்.

59. (1) நிறைகளும் அளவைகளும் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 158) இத்தால் நீக்கப்படுகின்றது. 158 ஆம் அத்தியாயத்தை நீக்குதலும் பேணல்களும்.

(2) முற்போந்த கட்டளைச் சட்டத்தின் நீக்கம் எவ்விதமாயிருப்பினும்—

(அ) நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர், பரிசோதகர் ஒருவரால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் அல்லது விடயம் எல்லா நோக்கங்களுக்குமாகவும் செல்லுபடியுடன் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்செயல் அல்லது விடயம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்டாற்போன்று பயனுறுதலும் வேண்டுக்

(ஆ) நீக்கப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 14 ஆம், 15 ஆம் பிரிவுகளின்கீழ் பெறப்பட்டுச் சரிபார்க்கப்பட்ட நிறுவையின் அல்லது அளவையின் நியமம் ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென எல்லா நோக்கங்களுக்காகவும் நிறுவையின் அல்லது அளவையின் நியமம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) நீக்கப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் சரிபார்க்கப்பட்டதும், உண்மை என்று உறுதிப்படுத்தப் பட்டதுமான நிறுவையின் அல்லது அளவையின் இரண்டாந்தர நியமம் ஒவ்வொன்றும், நீக்கப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உண்மையென உறுதிப் படுத்தப்பட்ட தொழிற்பாட்டிலுள்ள நியமம் ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென எல்லா நோக்கங்களுக்காகவும் முறையே இரண்டாந்தர நியமம் ஒன்றாக அல்லது மூன்றாந்தர நியமம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) நீக்கப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 31 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவையின் அல்லது அளவையின் அல்லது ஏதேனும் நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணத்தின் விற்பனைக்காக, உற்பத்திக்காக அல்லது பழுதுபார்த்தலுக்காக வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செல்லுபடியுடன் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

**ஒழுங்கு விதிகள்.**

60. (1) அமைச்சரானவர், இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட கருமங்களுக்காகவும், எக்கருமங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்களுக்காகவும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் அமைச்சரானவர் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எது தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் பரிசோதகர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கென எவரேனும் ஆளினால் சித்தியெய்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் சோதனைகள்;

(ஆ) இலங்கை நியமங்களினதும், குறியீட்டு நியமங்களினதும் இரண்டாந்தர நியமங்களினதும், மூன்றாந்தர நியமங்களினதும் பாதுகாப்பும் பேணலும்;

(இ) குறியீட்டு நியமங்களும், இரண்டாந்தர நியமங்களும், மூன்றாந்தர நியமங்களும் உண்மை என்றுறுதிப்படுத்தப்படவேண்டிய முறையும் சரிபார்க்கப்படவேண்டிய முறையும்;

(ஈ) மூன்றாந்தர நியமங்களுக்கான குறிப்பீடுகளும் அத்தகைய நியமங்கள் வைத்திருந்து பேணப்படவேண்டிய முறையும்;

(உ) இரண்டாந்தர நியமங்களையும், மூன்றாந்தர நியமங்களையும் பரிசோதிப்பதற்கும் இலச்சினையிடுவதற்குமான நடவடிக்கைமுறையும், பரிசோதகர்களின் பாவனைக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிறுக்கும் அளக்கும் உபகரணங்களைக் காலத்துக்காலம் சரி பார்த்தலும்;

(ஊ) நிறுவைகளினதும் அளவைகளினதும், நிறுக்கும் அளக்கும் உபகரணங்களினதும் சேர்வை, வடிவு, குறிப்பீடு என்பன பற்றிய தேவைப்பாடுகளும் அத்தகைய தேவைப்பாடுகளுக்கு இணங்காத நிறுவைகளினதும் அளவைகளினதும், நிறுக்கும் அளக்கும் உபகரணங்களினதும் உற்பத்தியை அல்லது பயன்பாட்டைத் தடை செய்தலும்;

(எ) நிறுவைகளும் அளவைகளும் நிறுக்கும் அளக்கும் உபகரணங்களும் பரிசோதகர்களால் பரிசோதிக்கப்படுதலும் சரிபார்க்கப்படுதலும் இலச்சினையிடப்படுதலும் நிறுவைகளினதும் அளவைகளினதும் செம்மையையும் வினைத்திறமையையும் உறுதிப்படுத்தும் நோக்கத்திற்குப் பிரயோகிக்கப்படும் சோதனைகளும் பரிசோதகர்களால் பயன்படுத்தப்படவுள்ள இலச்சினைகளின் வடிவும் உருவும் அத்தகைய இலச்சினைகள் பயன்படுத்தப்படவேண்டிய முறையும் அத்தகைய இலச்சினையிடல் தடைசெய்யப்பட்டுள்ள சூழ்நிலைகளும்;

(ஏ) ஒன்றில் பொதுவாக அல்லது ஏதேனும் வியாபாரம் தொடர்பில் நிறுவைகளினதும் அளவைகளினதும், நிறுக்கும் அளக்கும் உபகரணங்களினதும் சரிபார்த்தலின் போது அனுமதிக்கப்படக்கூடியதும் பரிசோதனையின் போதும் மாதிரி உருவ அங்கீகாரத்தின்போதும் விடுபடக்கூடியதுமான வரையறைகள் ;

(ஐ) எந்தப் பொதியாக்கப்பட்ட பொருட்களின் மூழு உள்ளடக்கம் நீளத்தினாலும் கனவளவினாலும் நிறையினாலும் குறியிடப்பட்டுள்ளதோ அந்தப் பொதியாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக அனுமதிக்கப்படும் விதிகளும், சோதனைகளும், நடவடிக்கைமுறைகளும், விடுபாடுகளும்;

(ஒ) பௌதிக தொடர்ச்சிகளும் எல்லா நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படவேண்டிய அவற்றின் நேரொத்த எண்ணிக்கைப் பெறுமானங்களும் ;

(ஓ) கைத்தொழில் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் நிறத்தினதும் இறுக்கத்தினதும் அத்தகைய தொடர்புப் பெறுமதியைத் தீர்மானிக்கும் முறைகள் ;

(ஔ) சரிபார்த்தற் குறிகள் எந்த ஆட்களினாலும் எந்த முறையிலும் எச்சூழ்நிலைகளிலும் எந்நிபந்தனைகளின் கீழும் அழிக்கப்படலாம் அல்லது உருவழிக்கப்படலாம் என்பது பற்றி;

(க) நிறைகளினதும், அளவைகளினதும் நிறுக்கும், அளக்கும் உபகரணங்களினதும் பரிசோதனைக்கும் சரிபார்த்தலுக்கும் பரிசோதகர்களால் அறவிடப்படவேண்டிய கட்டணங்களும் சரிபார்த்தலினதும் பரிசோதனையினதும் செலவும்;

(ங) விஞ்ஞானசமான உபகரணங்களை அளவு திருத்துவதற்கான முறைகளை நிர்மாணிக்கு முடிவுசெய்யப்படவேண்டிய முறை ;

(ச) இவ்வுட்பிரிவில் சிறப்பாகக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கருமங்களுக்கு அல்லது விடயங்களுக்கு இடைநேர்விளைவான அல்லது அவற்றுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு சீக்கிரமாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்துக்கு முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

61. (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி —

"அளவை" என்பது, திரவம் ஒன்றின் கனவளவைத் தீர்மானிப்பதற்கான நிர்மாணிக்கப்பட்ட கொள்ளளவு கொண்ட ஒரு பாத்திரம் அல்லது ஒரு அளவுகோலின் அல்லது கோட்டின் நீளம் ஒன்று என்று பொருள்படும்;

"அளக்கும் உபகரணம்" என்பது நீளம், பரப்பு, கனவளவு அல்லது கொள்ளளவு என்பனவற்றின் அளவீட்டிற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் உபகரணம் அல்லது ஏதேனும் அளவின் அளவீட்டிற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் உபகரணம் என்று பொருள்படும் ;

"மூன்றாந்தர நியமம்" என்பது, பரிசோதகர் ஒருவரால் பயன்படுத்தப்படும் அத்தகைய நியமத்திற்கென விதித்துரைக்கப்பட்ட செம்மைக் குறிப்பீட்டுடன், 8 ஆம் பிரிவின்கீழ் பேணப்பட்ட ஒரு நியமம் என்று பொருள்படும் ;

"வியாபாரம்" என்பது, ஏதேனும் கொடுக்கல் வாங்கல், ஒப்பந்தம், விற்பனை, பேரம் அல்லது 12 ஆம் பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விற்பனவு என்று பொருள்படும் ;

"அளவீட்டு அலகு" என்பது, முதலாம் இரண்டாம் அட்டவணைகளில் தரப்பட்டுள்ளவாறான ஏதேனும் அளவீட்டு அலகு என்று பொருள்படும் ;

"நிறுவை" என்பது, நிறுக்கும் உபகரணம் ஒன்றுடன் பயன்படுத்துவதற்கான நிர்ணயத் திணிவுப் பொருள் என்று பொருள்படும் ;

"நிறுக்கும் உபகரணம்" என்பது, திணிவை அல்லது நிறையை அளவீட்டிற்கான உபகரணம் ஒன்று என்று பொருள்படும்.

(2) இச்சட்டத்தின் நோக்கத்திற்காக ஒரு நிறுவை அல்லது அளவை-

(அ) சரிபார்க்கப்படுவதன்மேல், அது அந்த நிறுவையின் அல்லது அளவையின் தொழிற்பாட்டிலுள்ள நியமம் ஒன்றுக்கு இணங்கவிருப்பின் அல்லது சரிபார்த்தலின்போது அனுமதிக்கப்படக்கூடியதென விதித்துரைக்கப்பட்ட பிழையின் எல்லையைவிடக் கூடிய பிழையின் எல்லையைக் கொண்டிராதிருப்பின் ; அல்லது

(ஆ) பரிசோதனையின் மீது அது அந்த நிறுவையினது அல்லது அளவையினது தொழிற்பாட்டிலுள்ள நியமம் ஒன்றுக்கு இணங்கவிருப்பின், அல்லது பரிசோதனையின்போது விடப்படக்கூடியதைவிடக்கூடிய பிழையின் எல்லையைக் கொண்டிராததாயிருப்பின் ; அல்லது

(இ) தவறொன்று 45 ஆம் பிரிவின்கீழ் புரியப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக பிழையின் எல்லை பரிசோதனையின்போது அனுமதிக்கப்படும் பிழையின் எல்லையின் இருமடங்கை விஞ்சாததாயிருப்பின்,

சரியானதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நோக்கத்திற்காக, நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணமொன்று —

(அ) சரிபார்க்கப்பட்டதன்மேல், சரிபார்க்கப்படும்போது அனுமதிக்கப்படவேண்டிய விதித்துரைக்கப்பட்ட பிழையின் எல்லையைவிடக் கூடிய பிழையின் எல்லையை அது கொண்டிராததாயின் ; அல்லது

(ஆ) பரிசோதிக்கப்பட்டதன்மேல் பரிசோதனையின்போது விடுபடக்கூடியதைவிடக் கூடிய பிழையின் எல்லையை அது கொண்டிராததாயிருப்பின் ; அல்லது

(இ) தவறொன்று, 45 ஆம் பிரிவின்கீழ் புரியப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, பிழையின் எல்லை, பரிசோதனையின்போது அனுமதிக்கப்பட்ட பிழையின் எல்லையின் இருமடங்கை விஞ்சாதிருப்பின்,

சரியானதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

62. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## முதலாம் அட்டவணை

## வரை விலக்கணங்கள்

### பாகம் I

சர்வதேச முறையின் அடிப்படை அலகுகளும் அவற்றின் குறியீடுகளும் பின்வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1. | m எனும் மீற்றர் குறியீடு | — | நீளத்துக்கு |
| | kg எனும் கிலோகிராம் குறியீடு | — | திணிவுக்கு அல்லது நிறைக்கு |
| | S எனும் செக்கன் குறியீடு | — | நேரத்துக்கு |
| | A எனும் அம்பியர் குறியீடு | — | மின்னோட்டச் செறிவுக்கு |
| | K எனும் கெல்லின் குறியீடு | — | வெப்பவியக்க வெப்பநிலைக்கு |
| | cd எனும் கன்டெலா குறியீடு | — | ஒளிர் செறிவுக்கு |
| | mol எனும் மூல் குறியீடு | — | பதார்த்தத்தின் அளவுக்கு |

அடிப்படை அலகுகளின் வரைவிலக்கணங்கள் :

1.1 நீளத்தின் அலகு, "மீற்றர்" (m) ஆகும். மீற்றர் என்பது, 1/299 792 458 செக்கன் நேர இடைவெளியின்போது வெற்றிடத்தில் ஒளியினால் கடக்கப்பட்ட பாதையின் நீளமாகும். (17வது சி.ஜி.பி.எம். (1983) தீர்மானம்).

1.2 திணிவின் அலகு, "கிலோகிராம்" (kg) ஆகும். கிலோகிராம் என்பது, திணிவின் அலகு ; அது சர்வதேச கிலோ கிராம் மூல முன்மாதிரியின் திணிவுக்குச் சமமுமாகும். 1 ஆவது, 3 ஆவது சி.ஜி.பி.எம். 1889, 1901).

1.3 நேரத்தின் அலகு, "செக்கன்" (S) ஆகும். செக்கன் என்பது, சீசியம் 133 அணுவின் அடி நிலையின் இரு அதிபர நுண் மட்டங்களுக்கிடையிலான நிலைமாற்றத்தை நேரொத்த 9 192 631 770 கதிர்ப்புக்கால இடைவெளி ஆகும். (13 ஆவது சி.ஜி.பி.எம். (1967) தீர்மானம் 1).

1.4 மின்னோட்டச் செறிவின் அலகு, "அம்பியர்" (A) ஆகும். அம்பியர் என்பது, புறக்கணிக்கத்தக்க வட்டக்குறுக்கு வெட்டும், முடிவில் நீளமும் உள்ள இரு சமாந்தர நேர்க் கடத்திகள் வெற்றிடத்தில் 1 மீற்றர் இடைவெளிவிட்டு வைக்கப்படுமாயின் இந்தக் கடத்திகளிற் பாய்ந்து இவற்றுக்கிடையில், ஒரு மீற்றர் நீளத்துக்கு $2 \times 10^{-7}$ நியூற்றனுக்குச் சமமான விசையை உண்டாக்கக்கூடியதான மாறு மின்னோட்டமாகும். (சி.ஜி.பி.எம். (1946), தீர்மானம் 2 ஆனது 1948 ஆம் ஆண்டின் 9 ஆவது சி.ஜி.பி.எம். ஆல் அனுமதிக்கப்பட்டது.)

1.5 வெப்பவியக்க வெப்பநிலை அலகு என்பது, "கெல்வின்", (K) ஆகும். வெப்பவியக்க வெப்பநிலை அலகு ஆகிய கெல்வின் நீரினது மும்மைப்புள்ளியின் வெப்பவியக்க வெப்பநிலையின் 1/273.16 என்னும் பின்னமாகும். (13 ஆவது சி.ஜி.பி.எம். (1967), தீர்மானம் 4). வெப்பநிலையின் இடைவெளிகளைக் குறித்தற்கும் கெல்வின் பயன்படுத்தப்படுகின்றது.

1.6 ஒளிர் செறிவின் அலகு, "கன்டெலா" (cd) ஆகும். $540 \times 10^{12}$ ஹேற்ஸ் மீடிறனை உடையதும் குறித்த ஒரு திசையிலே கதிர்க்குஞ் செறிவு திண்மவானையனுக்கு 1/683, வாற்றாக உள்ளதுமான ஒருநிறக் கதிர்ப்பைக்காலுகின்ற ஒரு முதலின் அத்திசையிலான ஒளிர் செறிவே கன்டெலாவாகும்.

1.7 பதார்த்தத்தினது அளவின் அலகு, "மூல்" (mol) ஆகும். மூல் என்பது, 0.012 கிலோகிராம் காபன் 12 இல் உள்ள அணுக்களின் எண்ணிக்கைக்குச் சமமான மூலக உள்பொருட்களையுடைய ஒரு தொகுதியின் பதார்த்தத்தினது அளவாகும்.

குறிப்பு :(1) மூல் பயன்படுத்தப்படும்போது மூலக உள்பொருட்கள் குறித்துரைக்கப்படல் வேண்டும். இவை அணுக்கள், மூலக்கூறுகள், அயன்கள், இலத்திரன்கள் பிற துணிக்கைகள் அல்லது அத்தகைய துணிக்கைகளின் குறித்துரைக்கப்பட்ட தொகுப்புகளாயிருக்கலாம். (14 ஆவது சி.ஜி.பி.எம். 1971).

(2) (அ) இந்த வரைவிலக்கணங்களிற் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களுக்கான கருத்துகள் பௌதிகவியலின் அவற்றுக்குக் குறித்தொதுக்கியவாக இருக்கும்.

(ஆ) சி.ஜி.பி.எம். என்பது, நிறைகள், அளவைகள் என்பன பற்றிய பொது மாநாட்டினைக் குறிக்கும்.

## பாகம் II

குறை நிரப்பு அலகுகளும் அவற்றின் குறியீடுகளும் வரைவிலக்கணங்களும்.

2. குறை நிரப்பு அலகுகள் பின்வருமாறு.—ஆரையன்—குறியீடு, rad- தளக்கோணத்துக்கு.

திண்மவாரையன் குறியீடு, sr—திண்மக் கோணத்துக்கு.

2.1 தளக் கோணத்தின் அலகு.—

தளக் கோணத்தின் அலகானது ஆரையனாக இருக்கும். (குறியீடு :rad);

நீளத்தில் ஆரைக்குச் சமமான ஒரு வில்லைப் பரிதியில் வெட்டிக்கொள்ளும் ஒரு வட்டத்தின்-இரு ஆரைகளுக்கு இடையேயுள்ள தளக்கோணமே ஆரையன் ஆகும்.

2.2 திண்மக் கோணத்தின் அலகு.—

திண்மக் கோணத்தின் அலகானது திண்மவாரையனாக இருக்கும். (குறியீடு : sr) ஒரு கோளத்தின் ஆரைக்கு நீளத்திற் சமமான பக்கத்தை உடைய ஒரு சதுரத்தினது மேற்பரப்பின் பரப்பளவுக்குச் சமமான—அக்கோளத்தினது மேற்பரப்பின் பரப்பளவை வெட்டிக்கொள்கின்றது, கோளத்தின் மையத்தில் உச்சியைக் கொண்ட திண்மக் கோணமே திண்மவாரையன் ஆகும்.

## பாகம் — III

வழியலகுகளும் அவற்றின் குறியீடுகளும் வரைவிலக்கணங்களும்

(அ) வெளி, நேரம் என்பன தொடர்பான வழியலகுகள்.

3.1 அலை எண்ணின் அலகு.—

அலை எண் : மீற்றருக்கு 1 (குறியீடு : M) 1 மீற்றருக்குச் சமமான அலை நீளத்தை உடைய ஒருதிறக்கதிர்ப்பின் அலை எண்ணே மீற்றருக்கு 1 ஆகும்.

$$(1m^{-1} = \frac{1}{1\ m})$$

3.2 மேற்பரப்புப் பரப்பளவின் அலகு.—

மேற்பரப்புப் பரப்பளவு : சதுர மீற்றர் (குறியீடு : $M^2$) 1 மீற்றர் பக்கத்தைக் கொண்ட சதுரமொன்றின் மேற்பரப்பே சதுர மீற்றர் ஆகும்.

$$(1\ m^2 = 1m.\ 1m)$$

3.3 கனவளவின் அலகு.—

கனவளவு : கனமீற்றர் (குறியீடு : $m^3$) 1 மீற்றர் பக்கத்தைக் கொண்ட சதுரமுகியின் கனவளவே கன மீற்றர் ஆகும்.

$$(1\ m^3 = 1\ m \cdot 1\ m \cdot 1\ m)$$

3.4 மீடிறனின் அலகு.—

மீடிறன்: ஹேட்ஸ் (குறியீடு: Hz) 1 செக்கன் ஆவர்த்தன காலத்தைக் கொண்டதான ஆவர்த்தனத் தோற்றப்பாட்டின் மீடிறனே ஹேட்ஸ் ஆகும்.

$$(1\ Hz = 1\ s^{-1}\ \text{or}\ \frac{1}{1\ s})$$

3.5 கோண வேகத்தின் அலகு.—

கோண வேகம்: செக்கனுக்கு ஆரையன் (குறியீடு: rad/s அல்லது $rad.s^{-1}$) நிலைத்த ஓர் அச்சைப்பற்றிய சீரான சுழற்சியினூடே துணியப்பட்டு, 1 செக்கனில் 1 ஆரையனூடாகத் திரும்புகின்ற பொருளின் கோண வேகமே செக்கனுக்கான ஆரையனாகும்.

$$(1\ rad/s = \frac{1\ rad}{1\ s})$$

3.6 கோண ஆர்முடுகலின் அலகு.—

கோண ஆர்முடுகல்: செக்கன் வர்க்கத்துக்கு ஆரையன் (குறியீடு: $rad/s^2$ அல்லது $rad.s^{-2}$) நிலைத்த ஓர் அச்சைப்பற்றிச் சீராக மாறுகின்ற ஒரு சுழற்சியினூடே துணியப்படுகின்றதும் 1 செக்கனில் செக்கனுக்கு 1 ஆரையன் மாறும் கோண வேகத்தை உடையதுமான ஒரு பொருளின் கோண ஆர்முடுகலே செக்கன் வர்க்கத்துக்கான ஆரையனாகும்.

$$(1\ rad/s^2 = \frac{1\ rad/s}{1\ s})$$

3.7 கதியின் அலகு.—

கதி: செக்கனுக்கு மீற்றர் (குறியீடு m/s அல்லது $m.s^{-1}$) சீரான ஓர் அசைவினூடே துணியப்பட்டு, 1 செக்கனில் 1 மீற்றர் செல்கின்ற ஒரு பொருளின் கதியே செக்கனுக்கான மீற்றராகும்.

$$(1\ m/s = \frac{1\ m}{1\ s})$$

3.8 ஆர்முடுகலின் அலகு.—

ஆர்முடுகல்: செக்கன் வர்க்கத்துக்கு மீற்றர் (குறியீடு $m/s^2$ அல்லது $m.s^{-2}$) சீராக மாறுகின்ற ஓர் அசைவினூடே துணியப்படுகின்றதும் 1 செக்கனில் செக்கனுக்கு 1 மீற்றரால் கதி மாறுகின்றதுமான ஒரு பொருளின் ஆர்முடுகலே செக்கன் வர்க்கத்துக்கான மீற்றராகும்.

$$(1\ m/s^2 = \frac{1\ m/s}{1\ s})$$

3.9 சுழற்சி மீடிறனின் அலகு.—

சுழற்சி மீடிறன்: வலு சய ஒன்றுக்கு உயர்த்தப்பட்ட செக்கன் (குறியீடு:$s^{-1}$) ஒரு செக்கனில் ஒரு முழுச் சுழற்சியை ஆக்குகின்ற சீரான சுழற்சி அசைவின் சுழற்சி மீடிறனே சய ஒன்றுக்கு உயர்த்தப்பட்ட செக்கனாகும்.

$$(1\ s^{-1} = \frac{1}{1\ s})$$

குறிப்பு: இவ்வலகானது செக்கனுக்கான சுற்றல் எனவும் அழைக்கப்படும்.

3.10 ஒளியியல் தொகுதியின் அணைவு அலகு.—

ஒளியியல் தொகுதியின் அணைவு: தையொத்தர் (குறியீடு: $m^{-1}$) முறிவுச் சுட்டி ஒன்றைக் கொண்ட ஓர் ஊடகத்திலே குவியத் தூரம் ஒரு மீற்றராகவுள்ள ஓர் ஒளியியல் தொகுதியின் அணைவேதையொத்த தாகும்.

$$(1m^{-1} = \frac{1}{1\ m})$$

(ஆ) பொறியியல் தொடர்பான வழியலகுகள்

3.11 ஏக பரிமாண அடர்த்தியின் அலகு.—

ஏக பரிமாண அடர்த்தி: மீற்றருக்குக் கிலோகிராம் (குறியீடு: kg/m அல்லது $kg.\ m^{-1}$)

1 கிலோகிராம் திணிவையும் 1 மீற்றர் நீளத்தையும் கொண்ட சீரான வெட்டை உடைய ஓர் ஏகவினப் பொருளின் ஏகபரிமாண அடர்த்தியே மீற்றருக்கான கிலோகிராமாகும்.

$$(1\ kg/m = \frac{1\ kg}{1\ m})$$

3.12 பரப்பு அடர்த்தியின் அலகு.—

பரப்பு அடர்த்தி: சதுர மீற்றருக்குக் கிலோகிராம் (குறியீடு: $kg/m^2$ அல்லது $kg.\ m^{-2}$)

1 கிலோகிராம் திணிவையும் 1 சதுர மீற்றர்ப் பரப்பளவையும் சீரான தடிப்பையும் உடைய ஓர் ஏகவினப் பொருளின் பரப்பு அடர்த்தியே சதுர மீற்றருக்கான கிலோகிராமாகும்.

$$(1\ kg/m^2 = \frac{1\ kg}{1\ m^2})$$

3.13 அடர்த்தியின் அலகு.—

அடர்த்தி (திணிவு அடர்த்தி): கன மீற்றருக்குக் கிலோகிராம் (குறியீடு: $kg/m^3$ அல்லது $kg.m^{-3}$)

1 கிலோகிராமும் திணிவையும் 1 கன மீற்றர்க் கனவளவையும் உடைய ஓர் ஏகவினப் பொருளின் அடர்த்தியே கன மீற்றருக்கான கிலோகிராமாகும்.

$$(1\ kg/m^3 = \frac{1\ kg}{1m^3})$$

3.14 செறிவின் அலகு.—

செறிவு : கன மீற்றருக்குக் கிலோகிராம் (குறியீடு : kg/m³ அல்லது kg-m⁻³)

ஒரு கன மீற்றர் மொத்தக் கனவளவை உடையதும் தரப்பட்ட பதார்த்தத்தின் ஒரு கிலோகிராம் திணிவைக்கொண்டதுமான ஓர் ஏகவினக் கரைசலின் செறிவே கன மீற்றருக்கான கிலோ கிராமாகும்.

$$(1\ kg/m^3 = \frac{1\ kg}{1\ m^3}$$

3.15 விசையின் அலகு.—

விசை : நியூற்றன் (குறியீடு : N) 1 கிலோகிராம் திணிவுள்ள ஒரு பொருளுக்குப் பிரயோகிக்கப்படும்போது அதற்குச் செக்கன் வர்க்கத்துக்கு 1 மீற்றர் ஆர்முடுகலைத் தரும் விசையே நியூற்றனாகும்.

$$(1\ N = 1\ kg.\ 1\ m/s^2)$$

3.16 விசையினது திருப்பத்தின் அலகு.—

விசையின் திருப்பம் : மீற்றர் நியூற்றன் (குறியீடு : N.—m) ஒரு பொருள் திரும்பும் நிலைத்த அச்சிலிருந்து 1 மீற்றர் என்னும் செங்குத்துத் தூரத்திலே தாக்கும் 1 நியூற்றன் விசையினால் அப்பொருளில் உண்டாக்கப் படும் விசையின் திருப்பமே மீற்றர் நியூற்றனாகும்.

$$(1\ N.m. = 1.\ N.\ 1\ m)$$

3.17 அமுக்கம், தகைப்பு ஆகியவற்றின் அலகு.—

அமுக்கம், தகைப்பு ஆகியன : பஸ்கால் (குறியீடு : Pa) 1 சதுர மீற்றர் என்னும் தள மேற்பரப்பொன்றின்மீது தாக்கும் போது, அம் மேற்பரப்புக்குச் செங்குத்தாக 1 நியூற்றன் என்னும் மொத்த விசையைப் பிரயோகிக்கின்ற சீரான அமுக்கமே பஸ்காலாகும். அது 1 சதுர மீற்றர் என்னும் தள மேற்பரப்பொன்றின்மீது தாக்கும்போது, அம்மேற்பரப்புமீது 1 நியூற்றன் என்னும் மொத்த விசையைப் பிரயோகிக்கின்ற தகைப்புமாகும்.

$$(1\ Pa = \frac{1\ N}{1\ m^2})$$

3.18 இயக்கப்பிசுக்குமையின் அலகு.—

இயக்கப் பிசுக்குமை : பஸ்கால் செக்கன் (குறியீடு : Pa.s ) 1 மீற்றர் தூரத்தினால் வேறுக்கப்பட்டிருக்கின்ற இரு சமாந்தரத் தளங்களுக்கிடையே வேக வித்தியாசம் இருக்கும்போது, 1 சதுர மீற்றர் என்னும் தள மேற்பரப்பொன்றின் சீரான ஏகபரிமாண அசைவு 1 நியூற்றன் என்னும் அமர்முடுகும் விசைக்கு இட்டுச் செல்கின்ற ஓர் ஏகவினப் பாய்மத்தின் இயக்கப் பிசுக்குமையே பஸ்கால் செக்கனாகும்.

$$(1\ Pa\ .\ s = \frac{1\ pa.\ 1m}{1\ m/s})$$

3.19 இயக்கத்தியற் பிசுக்குமையின் அலகு.—

இயக்கத்தியற் பிசுக்குமை : செக்கனுக்குச் சதுர மீற்றர் (குறியீடு $m^2/s$ அல்லது $m^2 . s^{-1}$)

இயக்கப் பிசுக்குமை 1 பஸ்கால் செக்கனாகவும் அடர்த்தி 1 கிலோகிராம்/கன மீற்றராகவும் உள்ள பாய்மத்தின் இயக்கத்தியற் பிசுக்குமையே செக்கனுக்கான சதுர மீற்றராகும்.

$$(1\ m^2/s = \frac{1\ Pa.\ s}{1\ kg/m^3})$$

**3.20 பரப்பு இழுவையின் அலகு.—**

பரப்பு இழுவை: மீற்றருக்கு நியூற்றன் (குறியீடு: N/m அல்லது $N.m^{-1}$) ஒரு திரவத்தைச் சூழ்ந்திருக்கும் திரவியத்திலிருந்து அத்திரவத்தை வேறுபடுத்துகின்ற அத்திரவத்தின் மேற்பரப்புமீது 1 மீற்றர் நீளத்தின் மேலே 1 நியூற்றன் விசை தாக்கும்போது உண்டாக்கப்படும் பரப்பு இழுவையே மீற்றருக்கான நியூற்றனாகும்.

$$\left(1N/m = \frac{1\,N}{1\,m}\right)$$

**3.21 வேலை, சக்தி வெப்பக் கணியம் ஆகியவற்றின் அலகு.—**

வேலை, சக்தி, வெப்பக் கணியம்: யூல் (குறியீடு: J) 1 நியூற்றன் விசையொன்றின் பிரயோகப் புள்ளியானது விசையின் திசையிலே 1 மீற்றர் தூரத்தினூடாக இடம்பெயர்க்கப்படும் போது செய்யப்படும் வேலையே யூலாகும்

$$(1\,J = 1\,N.1\,m)$$

**3.22 வலு, சக்திப்பாய்ச்சல் வீதம், வெப்பப் பாய்ச்சல் வீதம் ஆகியவற்றின் அலகு.—**

வலு, சக்திப் பாய்ச்சல் வீதம், வெப்பப் பாய்ச்சல் வீதம்: வாற்று (குறியீடு: W) 1 யூல்/செக்கன் என்பதற்குச் சமனான சக்தி உண்டாதற்கு வழி உதவும் வலுவே வாற்றாகும்.

$$\left(1\,W = \frac{1\,J}{1\,s}\right)$$

**3.23 கனவளவுப் பாய்ச்சல் வீதத்தின் அலகு.—**

கனவளவுப் பாய்ச்சல் வீதம்: செக்கனுக்குக் கன மீற்றர் (குறியீடு: $m^3/s$ அல்லது $m^3.s^{-1}$) 1 கன மீற்றர் என்னும் கனவளவை உடைய ஒரு பதார்த்தம் கருதப்படும் குறுக்கு வெட்டினூடாக 1 செக்கனிற் செல்லுமாறு சீரான ஒரு பாய்ச்சலின் கனவளவுப் பாய்ச்சல் வீதமே செக்கனுக்கான கன மீற்றராகும்.

$$\left(1\,m^3/s = \frac{1\,m^3}{1\,s}\right)$$

**3.24 திணிவுப் பாய்ச்சல் வீதத்தின் அலகு.—**

திணிவுப் பாய்ச்சல் வீதம்: செக்கனுக்குக் கிலோகிராம் (குறியீடு: kg/s அல்லது $kg.s^{-1}$) 1 கிலோகிராம் திணிவுள்ள ஒரு பதார்த்தம் கருதப்படும் குறுக்கு வெட்டினூடாக 1 செக்கனிற் செல்லுமாறு சீரான ஒரு பாய்ச்சலின் திணிவுப் பாய்ச்சல் வீதமே செக்கனுக்கான கிலோகிராமாகும்.

$$\left(1\,kg/s = \frac{1\,kg}{1\,s}\right)$$

**3.25 தற் கனவளவின் அலகு.—**

தற் கனவளவு: கிலோகிராமுக்குக் கன மீற்றர் (குறியீடு: $m^3/kg$ அல்லது $m^3.kg^{-1}$) 1 கன மீற்றர்க் கனவளவையும் 1 கிலோகிராம் திணிவையும் உடைய ஓர் பொருளின் தற் கனவளவே கிலோகிராமுக்கான கன மீற்றராகும்.

$$\left(1\,m^3/kg = \frac{1\,m3}{1\,kg}\right)$$

(ஐ) வெப்பம் தொடர்பான வழியலகுகள்

3.26 எந்திரப்பியின் அலகு.—

எந்திரப்பி : கெல்வினுக்கு யூல் (குறியீடு : J/K அல்லது $J.K^{-1}$

ஒரு தொகுதியிற் புறமாற்றமுடியா மாற்றம் எதுவும் ஏற்படாவிட்டால், 1 கெல்வின் என்னும் மாறா வெப்பவியக்க வெப்பநிலையிலே 1 யூல் என்னும் வெப்பக் கணியத்தைப் பெறுகின்ற அத்தொகுதியின் எந்திரப்பியின் உள்ள அதிகரிப்பே கெல்வினுக்கான யூலாகும்.

$$\left(1\,J/K = \frac{1\,J}{1\,K}\right)$$

3.27 தன் எந்திரப்பியின் அலகு.—

தன் எந்திரப்பி : கிலோகிராம் கெல்வினுக்கு யூல் (குறியீடு : J/kg.K அல்லது $J.kg^{-1}\,K^{-1}$)

ஒரு தொகுதியிற் புறமாற்றமுடியா மாற்றம் எதுவும் ஏற்படாவிட்டால், 1 கெல்வின் என்னும் மாறா வெப்பவியக்க வெப்பநிலையிலே 1 யூலுக்குச் சமமான வெப்பக் கணியத்தைப் பெறுகின்ற 1 கிலோகிராம் எகவினத் திணிவுள்ள அத்தொகுதியின் தன் எந்திரப்பியே கிலோகிராம் கெல்வினுக்கான யூலாகும்.

$$\left(1\,J/kg.\,K. = \frac{1J}{1\,kg.\,1K}\right)$$

3.28 வெப்பக் கொள்ளளவின் அலகு

வெப்பக் கொள்ளளவு : கெல்வினுக்கு யூல் (குறியீடு: J/K அல்லது $J.K^{-1}$) வெப்பவியக்க வெப்பநிலையிலே ஒரு யூலுக்குச் சமமான வெப்பக் கணியம் ஒரு கெல்வின் அதிகரிப்பை உண்டாக்கும் ஓர் எகவினப் பொருளின் வெப்பக் கொள்ளளவே கெல்வினுக்கான யூலாகும்.

$$\left(1\,J/K = \frac{1J}{1\,K}\right)$$

3.29 தன்வெப்பக் கொள்ளளவின் அலகு.—

தன்வெப்பக் கொள்ளளவு : கிலோகிராம் கெல்வினுக்கு யூல் (குறியீடு: J/kg.K) அல்லது $J.kg^{-1}\,K^{-1}$) 1 கிலோகிராம் திணிவை உடையதும் 1 யூல் வெப்பக் கணியம் சேர்க்கப்படும்போது 1 கெல்வின் வெப்பநிலை அதிகரிப்பு உண்டாகின்றதுமான ஓர் எகவினப் பொருளின் தன்வெப்பக் கொள்ளளவே கிலோகிராம் கெல்வினுக்கான யூலாகும்.

$$\left(1\,J/(kg.\,K) = \frac{1J}{1\,kg.\,1\,K}\right)$$

3.30 மறைவெப்பத்தின் அலகு.—

மறைவெப்பம் : கிலோகிராமுக்கு யூல் (குறியீடு : (J/kg அல்லது $J.kg^{-1}$)

ஒரு பதார்த்தத்தின் 1kg ஆனது ஓர் அவத்தையிலிருந்து அதன் மாறும் அவத்தையின் வெப்பநிலையிலே வேறோர் அவத்தைக்கு மாறும்போது பரிமாறும் வெப்பமே கிலோகிராமுக்கான யூலாகும்.

$$\left(1\,J/kg = \frac{1\,J}{kg}\right)$$

3.31 வெப்பக் கடத்தாறின் அலகு.—
வெப்பக் கடத்தாறு : மீற்றர்க் கெல்வினுக்கு வாற்று — (குறியீடு 1 W/m.K அல்லது $W.m.^{-1} K^{-1}$)1 சதுர மீற்றர் மேற்பரப்பை உடையனவும் 1 மீற்றர் இடைத் தூரத்தில் உள்ளனவுமான இரு சமாந்தரத் தளங்களுக்கிடையே 1 வாற்று வெப்பப் பாய்ச்சல் வீதத்தை 1 கெல்வின் வெப்பநிலை வித்தியாசம் உண்டாக்கும் ஓர் ஏகவினப் பொருளின் வெப்பக் கடத்தாறே மீற்றர்க் கெல்வினுக்கான வாற்றாகும்.

$$(1\ W/(m.K). = \frac{1W/m^2}{1\ K/1\ m})$$

(ஈ) மின்னியல், காந்தவியல் என்பன தொடர்பான வழியலகுகள்

3.32 மின் கணியத்தின் அலகு.
மின் கணியம், மின்னேற்றம்: கூலோம் (குறியீடு):C) 1 அம்பியர் மின்னோட்டத்தினால் 1 செக்கனிற் கொண்டு செல்லப் படும் மின் கணியமே கூலோமாகும்.

$$(1\ C = A.\ 1s = 1A.s.)$$

3.33 மின்னழுத்தம், மின்னிழுவை, மின்னியக்க விசை ஆகியவற்றின் அலகு.—
மின்னழுத்தம், மின்னிழுவை, மின்னியக்க விசை, வோல்ற்று (குறியீடு; V) 1 அம்பியர் என்னும் மாறா மின்னோட்டத்தைக் கொண்டுசெல்கின்ற கடத்தும் கம்பியொன்றின் இரு புள்ளிகளுக்கிடையே செலவாகும் வலு 1 வாற்றுக்குச் சமமாக இருக்கும்போது இப்புள்ளிகளுக்கு இடையேயுள்ள மின்னழுத்த வித்தியாசமே வோல்ற்றாகும் .

$$(1\ V = \frac{1\ W}{1\ A})$$

3.34 மின் புல வலிமையின் அலகு.—
மின் புல வலிமை : மீற்றருக்கு வோல்ற்று (குறியீடு V/m அல்லது $V.m^{-1}$) 1 கூலோம் மின் கணியம் ஏற்றப்பட்டுள்ள ஒரு பொருளின்மீது 1 நியூற்றன் விசையைப் பிரயோகிக்கும் மின் புலத்தின் வலிமையே மீற்றருக்கான வோல்ற்றாகும்.

$$(1\ V/m = \frac{1N}{1C})$$

3.35 மின்னேற்ற அடர்த்தியின் அலகு.—
மின்னேற்ற அடர்த்தி : கன மீற்றருக்குக் கூலோம் (குறியீடு : $C/m^3$ அல்லது $C/m^{-3}$) 1 கன மீற்றர்க் கனவளவையும் 1 கூலோம் மின்னேற்றத்தையும் உடைய ஓர் ஏகவினத் திணிவின் அல்லது தொகுதியின் மின்னேற்ற அடர்த்தியே கன மீற்றருக்கான கூலோமாகும்.

$$(1\ C/m^3 = \frac{1C}{1\ m^3})$$

3.36 மின் பாய அடர்த்தியின் அலகு.—
மின் பாய அடர்த்தி : சதுர மீற்றருக்குக் கூலோம் (குறியீடு: $C/m^2$ அல்லது $C.m^{-2}$) ஒன்றுக்கொன்று சமாந்தரமான—முடிவில் நீளமுள்ள-தட்டுகளைக் கொண்ட ஓர் ஒடுக்கிக்கு, வெற்றிடத்தில் தட்டின் 1 சதுர மீற்றர்ப் பரப்பளவுக்கு ஒரு கூலோம் என்பதற்குச் சமமான மின்கணியம் மின்னேற்றப்படும்போது உள்ள மின் பாய அடர்த்தியே சதுர மீற்றருக்கான கூலோமாகும்.

$$(1\ C/m^2 = \frac{1C}{1\ m^2})$$

3.37 மின் தடையின் அலகு.—

மின் தடை: ஓம் (குறியீடு Ω) ஒரு கடத்தி மின்னியக்க விசை எதனையும் இருப்பிடமாக இராதவிடத்து, அக்கடத்தியின் இரு புள்ளிகளுக்கும் இடை பிரயோகிக்கப்படும் 1 வோல்ற்று என்னும் மாறா அழுத்த வித்தியாசம் கடத்தியிலே 1 அம்பியர் மின்னோட்டத்தை உண்டாக்கும்போது இவ்விரு புள்ளிகளுக்கும் இடையேயுள்ள மின் தடையே ஓமாகும்.

$$\left(1\,\Omega = \frac{1V}{1A}\right)$$

3.38 கடத்துதிறனின் அலகு.—

கடத்துதிறன்: சீமென்ஸ் (குறியீடு: S) 1 ஓம் மின் தடையைக் கொண்ட ஒரு கடத்தியின் கடத்து திறனே சீமென்சாகும்.

$$\left(1S = 1\Omega^{-1} \quad \frac{1}{1\Omega}\right)$$

3.39 மின் கொள்ளளவத்தின் அலகு.—

மின் கொள்ளளவும்: பரட்டு (குறியீடு: F) ஒரு கொள்ளளவிக்கு 1 கூலோம் மின் கணியத்தை ஏற்றும்போது, 1 வோல்ற்று மின்னழுத்த வித்தியாசம் இருப்பதாகத் தோற்றும் கொள்ளளவியின் தட்டுகளுக்கிடையே கொள்ளளவியின் கொள்ளளவமே பரட்டாகும்.

$$\left(1F = \frac{1C}{1V}\right)$$

3.40 அனுமதித்திறனின் அலகு.—

அனுமதித்திறன்: மீற்றருக்குப் பரட்டு (குறியீடு: F/m அல்லது $F.m^{-1}$) மீற்றர் தூரத்தினால் வேறுக்கப்பட்டிருக்கும் இரு சமாந்தரத் தட்டுகளின் சதுர மீற்றர்ப் பரப்பளவுக்கு 1 பரட்டுக் கொள்ளளவத்தைத் தரும் ஊடகத்தின் அனுமதித்திறனே மீற்றருக்கான பரட்டாகும்.

$$\left(1F/m = \frac{1F}{1m}\right)$$

3.41 தூண்டற்றிறனின் அலகு.—

தூண்டற்றிறன்: ஹென்றி (குறியீடு: H) அடைத்த ஒரு சுற்றின் ஊடான மின்னோட்டம் செக்கனுக்கு 1 அம்பியர் வீதத்தில் சீராக மாறும்போது 1 வோல்ற்று மின்னியக்க விசை உண்டாக்கப்படும் அச்சுற்றில் உள்ள மின் தூண்டற்றிறனே ஹென்றியாகும்.

$$\left(1H = \frac{1V.1s}{1A}\right)$$

3.42 உட்புகவிடுமியல்பின் அலகு.—

உட்புகவிடுமியல்பு: மீற்றருக்கு ஹென்றி (குறியீடு: H/m அல்லது $H.m^{-1}$) 1 ஹென்றி தூண்டற்றிறனைத் தருகின்ற 1 சதுர மீற்றர்ப்பரப்பளவும் 1 மீற்றர் நீளமும் உட்படத் தட்டைத் தாட் கடத்தியின் தனி ஒரு சுற்றினூடு சூழப்பட்ட ஒரு திரவியத்தின் உட்புகவிடுமியல்பே மீற்றருக்கான ஹென்றியாகும்.

$$\left(1H/m = \frac{1H}{1m}\right)$$

3.43 காந்தப் பாயத்தின் அலகு.—

காந்தப் பாயம், காந்தத் தூண்டற் பாயம் : வேபர் (குறியீடு : Wb) 1 முறுக்குள்ள சுற்றை இணைக்குமிடத்து, 1 செக்கனிலே சீரான வீதத்திற் பூச்சியமாகக் குறைக்கப்படுமாறு அதில் 1 வோல்ற்று மின்னியக்க விசையை உண்டாக்குகின்ற காந்தப் பாயமே வேபராகும்.

$$(1\ Wb = 1\ V.1\ s)$$

3.44 காந்தத்தூண்டலின் அலகு.—

காந்தத் தூண்டல், காந்தப் பாய அடர்த்தி : ரெஸ்லா (குறியீடு : T) 1 சதுர மீற்றர் மேற்பரப்புமீது செவ்வனாகப் பரம்பப்படுமிடத்து மேற்பரப்புக்குக் குறுக்கே 1 வேபர் என்னும் மொத்தக் காந்தப்பாயத்தை உண்டாக்குகின்ற சீரான காந்த தூண்டலே ரெஸ்லாவாகும்.

$$(1\ T = \frac{1\ Wb}{1\ m^2})$$

3.45 காந்தவியக்க விசையின் அலகு.—

காந்தவியக்க விசை : அம்பியர் (குறியீடு : A) ஒரு மின் கடத்தியை ஒரு தரம்மாத்திரம் சூழ்ந்துள்ள அல்லது அதனூடாக அம்பியர் மின்னோட்டம் செல்கின்ற வாறாமிருப்போர் அடைத்த வளைவு வழியே உள்ள காந்தவியக்க விசையே அம்பியராகும்.

3.46 காந்தப் புலவலிமையின் அலகு.—

காந்தப் புல வலிமை: மீற்றருக்கு அம்பியர் (குறியீடு: A/m) அல்லது $A.m^{-1}$) 1 மீற்றரப் பரிதியுள்ள ஒரு வட்டத்தின் அச்சை அமைக்கின்ற முடிவில் நீளமும் புறக்கணிக்கத்தக்க வட்டக் குறுக்குவெட்டும் உள்ள ஒரு நேர்க் கடத்தியிற் பேணப்படும் 1 அம்பியர் மின்னோட்டத்தினால் அவ்வட்டத்தின் பரிதி வெளிநிடத்தில் உண்டாக்கப்படும் காந்தப் புலத்தின் வலிமையே மீற்றருக்கான அம்பியராகும்.

$$(1\ A/m = \frac{1\ A}{1\ m})$$

3.47 மின்னோட்ட அடர்த்தியின் அலகு.—

மின்னோட்ட அடர்த்தி: சதுர மீற்றருக்கு அம்பியர் (குறியீடு : $A/m^2$ அல்லது $A.m^{-2}$) மின்னோட்டப் பாய்ச்சலின் திசைக்குச் செங்குத்தான ஓர் ஏகபரிமாணக் கடத்தியின்—ஒரு சதுர மீற்றருக்குச் சமமான ஒரு குறுக்கு வெட்டினூடாக 1 அம்பியர் செறிவுள்ள ஒரு மின்னோட்டம் சீராகப் பாயும்போது அக்கடத்தியில் உள்ள மின்னோட்ட அடர்த்தியே சதுர மீற்றருக்கான அம்பியராகும்.

$$(1\ A/m^2 = \frac{1\ A}{1\ m^2})$$

(உ) மின்காந்தக் கதிர்ப்பு, ஒளி என்பன தொடர்பான வழியலகுகள்

3.48 கதிர்க்குச் செறிவின் அலகு.

கதிர்க்குச் செறிவு : திண்மவாரையனுக்கு வாற்று (குறியீடு : W/sr அல்லது $W.sr^{-1}$), திண்மவாரையன் திண்மக் கோணத்தில் 1 வாற்று என்னும் கதிர்க்கும் பாயத்தைச் சீராக அனுப்புகின்ற ஒரு புள்ளி மூலத்தில் கதிர்க்குச் செறிவே திண்மவாரையனுக்கான வாற்றாகும்.

$$(1\ W/sr = \frac{1\ W}{1\ sr})$$

3.49 கதிரடையின் அலகு.—

கதிரடை: சதுர மீற்றருக்கு வாற்று (குறியீடு: $W/m^2$ அல்லது ($W.m^{-2}$) 1 சதுர மீற்றர் மேற்பரப்பைக் கொண்டதும் புள்ளி முதலை அடக்கிய நடுமான ஒரு மூலகத்தின்மீது சீராகப் பரம்பிய 1 வாற்று என்னும் கதிர்க்கும் பாயத்தினால் உண்டாக்கப்படும் கதிரடையே சதுர மீற்றருக்கான வாற்றுறாம்.

$$(1W/m^2 = \frac{1W}{1m^2})$$

3.50 கதிர்ச்சியின் அலகு.—

கதிர்ச்சி: சதுர மீற்றர்த் திண்மவாரையனுக்கு வாற்று (குறியீடு $W/m^2.sr$ அல்லது $W.m^{-2}.sr^{-1}$) எறிந்த பரப்பளவின் சதுர மீற்றருக்குத் திண்மவாரையனுக்கு 1 வாற்றைக் கதிர்கின்ற ஒரு முதலின் கதிர்ச்சியே சதுர மீற்றர்த் திண்மவாரையனுக்கான வாற்றாகும்.

$$(1\,W/m^2\,sr = \frac{1W}{1\,m2.\,1\,sr})$$

3.51 ஒளிர்றின் அலகு.—

ஒளிர்று: சதுர மீற்றருக்குத் கன்டெலா (குறியீடு: $cd/m^2$ அல்லது $cd.m^{-2}$) ஒரு முதலின் 1 சதுர மீற்றர்த் தள மேற்பரப்புக்குச் செங்குத்தான ஒளிர் செறிவு 1 கன்டெலாவாக இருக்க, அத்தள மேற்பரப்புக் செங்குத்தான ஒளிர் ஒளிர்றே சதுர மீற்றருக்கான கன்டெலாவாகும்.

$$(1\,cd/m^2 = \frac{1\,cd}{1m^2})$$

3.52 ஒளிர் பாயத்தின் அலகு.—

ஒளிர் பாயம்: லூமன் (குறியீடு: lm) 1 கன்டெலா ஒளிர் செறிவை உடைய சீரான ஒரு புள்ளி முதலினால் 1 திண்மவாரையன் என்னும் திண்மக் கோணத்திற் காணப்படும் ஒளிர் பாயமே லூமனாகும்.

$$(1\,lm = 1\,cd.\,1\,sr)$$

3.53 ஒளிர்ச்சியின் அலகு.—

ஒளிர்ச்சி: லக்சு (குறியீடு: lx) ஒரு மேற்பரப்பின் 1 சதுர மீற்றர்மீது சீராகப் பரம்பிய 1 லூமன் ஒளிர் பாயத்தைப் பெறுகின்ற அம்மேற்பரப்பின் ஒளிர்ச்சியே லக்சாகும்.

$$(1\,lx = \frac{1\,lm}{1\,m^2})$$

(ஊ) அயனுக்கக் கதிர்ப்பு தொடர்பான வழியலகுகள்

3.54 தொழிற்பாட்டின் (ஒரு கதிர்த் தொழிற்பாட்டு முதலின்) அலகு.—

ஒரு கதிர்த் தொழிற்பாட்டு முதலின் தொழிற்பாடு: பெக்கெறல் குறியீடு : Bq) செக்கனுக்கு ஒரு கரு நிலைமாற்றம் அல்லது நிலைமாறல் தடைபெறுகின்ற ஒரு கதிர்த் தொழிற்பாட்டு முதலின் தொழிற்பாடே பெக்கெறலாகும்.

$$(1\,Bq = \frac{1}{1s})$$

3.55 உறிஞ்சிய ஊட்டின் அலகு.—

உறிஞ்சிய ஊட்டு: கிறே (குறியீடு: Gy) சக்திப் பாய்தகவு மாறிலியாக உள்ள கதிர்ப்பை அயனாக்குவதன் மூலம் 1 யூல் சக்தி அளிக்கப்படுகின்ற 1 கிலோகிராம் திணிவின் சடப்பொருள் மூலகத்தில் உறிஞ்சப்படும் ஊட்டே கிறேயாகும்.

$$( 1 \text{ Gy} = \frac{1 \text{ J}}{1 \text{ kg}} )$$

3.56 வெளிதரலின் அலகு

வெளிதரல்: கிலோகிராமுக்குக் கூலோம் (குறியீடு :C/kg அல்லது $C.kg^{-1}$ கருதப்படும் வளிக் கனியத்திற் சக்திப் பாய்தகவு சீராக இருக்குமிடத்து, 1 கிலோகிராம் திணிவுள்ள வளிக்கனியத்திலே 1 கூலோம் என்னும் மொத்த மின்னேற்றத்தைக் கொண்டு செல்கின்ற ஒரு குறியைச் சேர்ந்த அயன்களை உண்டாக்கக்கூடிய போட்டன அயனாக்கும் கதிர்ப்பை வெளிதரலே கிலோகிராமுக்கான கூலோமாகும்.

$$(1 \text{ C/kg} = \frac{1 \text{ C}}{1 \text{ kg}} )$$

(எ) பௌதிக இரசாயனவியல், கருப் பௌதிகவியல் என்பன தொடர்பான வழியலகுகள். —

3.57 செறிவின்: (பதார்த்தத்தினது அளவின்) அலகு.—

செறிவு (பதார்த்தத்தின் அளவு): கன மீற்றருக்கு மூல் (குறியீடு: $mol/m^3$ அல்லது $mol.m^{-3}$) தரப்பட்ட பொருளின் ஒரு மூல் செறிவைக் கொண்டதும் 1 கன மீற்றர் மொத்தக் கனவளவை உடையதுமான ஓர் ஏகவினக் கரைசலின் செறிவே கன மீற்றருக்கான மூலாகும்.

$$(1 \text{ mol/m}^3 = \frac{1 \text{ mol}}{1 \text{ m3}})$$

3.58 மூலர்ச் சக்தியின் அலகு.—

மூலர்ச் சக்தி: மூலுக்கு யூல் (குறியீடு: J/mol அல்லது $J.mol^{-1}$) 1 யூல் சக்தியைக் கொண்ட பதார்த்தத்தினது ஒரு மூலின் மூலர்ச்சக்தியே மூலுக்கான யூலாகும்.

$$( 1 \text{ J/mol} = \frac{1 \text{ J}}{1 \text{ mol}})$$

3.59 மூலர் எந்திரப்பியின் அலகு.—

மூலர் எந்திரப்பி: மூல் கெல்வினுக்கு யூல் (குறியீடு: J/mol.K அல்லது $J.mol^{-1}K^{-1}$) ஏகவினத் திணிவுள்ள ஒரு தொகுதியிற் புறமாற்ற முடியா மாற்றம் எதுவும் ஏற்படாவிட்டால், 1 கெல்வின் என்னும் மாறா வெப்பவியக்க வெப்ப நிலையிலே 1 யூலுக்குச் சமமான வெப்பக் கணியத்தைப் பெறுகின்ற 1 மூலுக்குச் சமமான பதார்த்தத்தை உடைய அத்தொகுதியின் மூலர் எந்திரப்பியே மூல் கெல்வினுக்கான யூலாகும்.

$$( 1 \text{ J/mol.k} = \frac{1 \text{ J}}{1 \text{ mol.1k}} )$$

## பாகம் IV

SI முன்னீடுகளின் பெயர்களும் பருமன்களும் குறியீடுகளும். SI முன்னீடுகளின் பயன்பாடு பற்றிய கோட்பாடுகளும்.

4.1 SI முன்னீடுகளின் பெயர்களும் பருமன்களும் குறியீடுகளும்.—

SI அலகுகளின் தசம மடங்குகளும் உப-மடங்குகளும் பின்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள-சம்பந்தப்பட்ட—SI அலகு பெருக்கப்படுகின்ற தசம எண் காரணிகள் மூலம் உருவாக்கப்படுகின்றன.

4.2 SI அலகுகளின் தசம மடங்குகளினதும் உப-மடங்குகளினதும் பெயர்கள் தசம எண் காரணிகளைக் குறிப்பிடும் SI முன்னீடுகள் மூலம் உருவாக்கப்படுகின்றன.

| காரணிகள் | | SI முன்னீடு | குறியீடு |
|---|---|---|---|
| 1 000 000 000 000 000 000 | $= 10^{18}$ | எக்சா | E |
| 1 000 000 000 000 000 | $= 10^{15}$ | பெற்ரு | P |
| 1 000 000 000 000 | $= 10^{12}$ | ரெரு | T |
| 1 000 000 000 | $= 10^{9}$ | கைகா | G |
| 1 000 000 | $= 10^{6}$ | மெகா | M |
| 1 000 | $= 10^{3}$ | கிலோ | k |
| 100 | $= 10^{2}$ | ஹெக்ரோ | h |
| 10 | $= 10^{1}$ | டெகா | da |
| 0.1 | $= 10^{-1}$ | டெசி | d |
| 0.01 | $= 10^{-2}$ | சென்ரி | c |
| 0.001 | $= 10^{-3}$ | மில்லி | m |
| 0.000 001 | $= 10^{-6}$ | மைக்ரோ | u |
| 0.000 000 001 | $= 10^{-9}$ | நனோ | n |
| 0.000 000 000 001 | $= 10^{-12}$ | பிக்கோ | p |
| 0.000 000 000 000 001 | $= 10^{-15}$ | பெம்ரோ | f |
| 0.000 000 000 000 000 001 | $= 10^{-18}$ | அற்ரோ | a |

4.3 முன்னீடு என்பது, அது நேரடியாக இணைக்கப்பட்ட அலகின் பெயருடன் சேர்க்கப்பட்டதெனக் கருதப்படுகின்றது.

4.4 முன்னீட்டின் குறியீடு இடைநிலை வெளி இல்லாமல் அலகின் குறியீட்டுக்கு முன்னால் வைக்கப்படல் வேண்டும்: இது முழுவதும் அலகின் மடங்கினது அல்லது உபமடங்கினது குறியீட்டை உருவாக்குகின்றது—ஆகவே, முன்னீட்டின் குறியீடு அது நேரடியாக இணைக்கப்பட்ட அலகின் குறியீட்டுடன் சேர்க்கப்பட்டதெனக் கருதப்படுகின்றது. இதனுடன் நேர் அல்லது மறை வலுவுக்கு உயர்த்தப்படக்கூடியதும் கூட்டு அலகுகளுக்கான குறியீடுகளை உருவாக்குவதற்கு மற்றைய அலகுக் குறியீடுகளுடன் சேர்க்கப்படக்கூடியதுமான புதிய அலகுக் குறியீடு உருவாகின்றது.

4.5 பல SI முன்னீடுகளின் அடுநிலை மூலம் உருவாக்கப்படும் கூட்டுமுன்னீடுகள் அனுமதிக்கப்படுவதில்லை.

4.6 திணிவினது அலகின் தசம மடங்குகளினதும் உப—மடங்குகளினதும் பெயர்களும் குறியீடுகளும் "கிராம்" என்ற சொல்லுக்கு SI முன்னீடுகளைச் சேர்ப்பதன் மூலம் உருவாக்கப்படுகின்றன. கிராம் (குறியீடு : g) $0.001\ kg = 10^{-3} kg$

4.7 பின்னத்தின் வடிவில் எடுத்துரைக்கப்படும் வழியலகொன்றின் தசம மடங்குகள், உப—மடங்குகள் ஆகியவற்றைக் குறிப்பிடுதற்கு, ஒன்றில் தொகுதியில் அல்லது பகுதியில் அல்லது இவ்விரண்டு உறுப்புகளிலும் அலகுகளுக்கு முன்னீடொன்று சாராகவாறு இணைக்கப்படமுடியும்.

## பாகம் V

அடிப்படை, குறைநிரப்பு அல்லது வழி அலகுகளுடன் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட அலகுகள்.

**5.1.** *நேரத்தின் அனுமதித்த அலகுகள்.—*

நேரம் தொடர்பான அனுமதித்த அலகுகள்

(i) நிமிட (குறியீடு : min) நிமிடமானது 60 செக்கனுக்குச் சமமாகும்.

(ii) மணி (குறியீடு : h) மணியானது 3600 செக்கனுக்குச் சமமாகும்.

(iii) நாள் (குறியீடு : d) நாளானது 86,400 செக்கனுக்கு அல்லது 24 மணிக்குச் சமமாகும்.

(iv) பொதுவின் காலாந்தரத்தின் வாரம், மாதம், ஆண்டு.

**5.2.** *தளக் கோணத்தின் அனுமதித்த அலகுகள்.—*

தளக் கோணம் தொடர்பான அனுமதித்த அலகுகள்

(i) சுற்றல் (திருப்பம்) சுற்றலானது 2 $\overline{\Lambda}$ ஆரையனுக்குச் சமமாகும்.

(ii) பாகை (குறியீடு : 0 ) பாகையானது $\frac{\overline{\Lambda}}{180}$ ஆரையனுக்குச் சமமாகும்

(iii) கலை (குறியீடு : ′ ) கலையானது $\frac{\overline{\Lambda}}{10\ 800}$ ஆரையனுக்கு அல்லது

$(\frac{1}{60})^{\circ}$ இற்குச் சமமாகும்.

(iv) விகலை (குறியீடு : ″) விகலையானது $\frac{\overline{\Lambda}}{648\ 000}$ ஆரையனுக்கு அல்லது

$(\frac{1}{60})'$ இற்குச் சமமாகும்.

**5.3.** *கனவளவின் அனுமதித்த அலகுகள்.—*

கனவளவு தொடர்பான அனுமதித்த அலகுகள்.

(i) லீற்றர் குறியீடு : L அல்லது l) லீற்றரானது கன மீற்றரின் ஆயிரத்தில் ஒரு பகுதிக்குச் சமமாகும்.

**5.4.** *திணிவின் அல்லது நிறையின் அனுமதித்த அலகுகள்*

திணிவு அல்லது நிறை தொடர்பான அனுமதித்த அலகுகள்

(i) மெட்ரிக் தொன் (குறியீடு : t) உம் மெட்ரிக் தொன்னின் மடங்குகளும் "கிலோ", "மெகா", "கைகா", "ரெரு" ஆகிய வற்றுடன உருவாக்கப்படுகின்றன.

மெட்ரிக தொன்னானது, 1000 கிலோகிராமுக்குச் சமமாகும்.

(ii) அணுத் திணிவலகு (குறியீடு : U) அணுத் திணிவலகானது 12C நியூக்கிளைட்டு அணுவொன்றின் திணிவினது 1/12 பின்னத்துக்குச் சமமாகும். 1 U = 1.660 57 × $10,^{-27}$ kg (அண்ணளவாக) இரசாயனவியலிலும் பௌதிகவியலிலும் மாத்திரம் இதன் உபயோகம் அனுமதிக்கப்படும்.

(iii) மெட்ரிக் காட்டு (குறியீடு: CM) மெட்ரிக் காட்டானது 0.000 2 கிலோகிராமுக்குச் சமமாகும். மதிப்பு மிகுந்த கற்களின் திணிவைச் சுட்டிக்காட்டுவதற்கு மாத்திரம் இதன் உபயோகம் அனுமதிக்கப்படும்.

ஏகபரிமான அடர்த்தியின் (ஆடை வகை) அனுமதித்த அலகுகள்.—

5.5 நார்களினதும் ஆடைகளினதும் ஏகபரிமாண அடர்த்தி தொடர்பான அனுமதித்த அலகுகள்

(i) தெக்க (குறியீடு: tex), தெக்ஸின் மடங்குகள், உப மடங்குகள் ஆகியன முதற் பட்டியலின் பகுதி IV இற்கிணங்க அமைந்தனவாகும். தெக்கானது $10^{-6}$ கிலோகிராம்/மீற்றர் என்பதற்குச் சமமாகும்.

5.6 பரப்பளவின் அனுமதித்த அலகுகள்.—

பரப்பளவு தொடர்பான அனுமதித்த அலகுகள்

(i) ஹெக்ரெயர் (குறியீடு: ha) ஹெக்ரெயரானது 10 000 சதுர மீற்றருக்குச் சமமாகும். காணிப் பரப்பளவை அளத்தலில் மாத்திரம் இதன் உபயோகம் அனுமதிக்கப்படும்.

5.7 அமுக்கத்தின் அனுமதித்த அலகுகள்.—

அமுக்கம் தொடர்பான அனுமதித்த அலகுகள்

(i) பார் (குறியீடு: bar) பாரானது 100 000 பஸ்காலுக்குச் சமமானது. பாய்மத்தின் அமுக்கத்தை அளவிடுதலின் மாத்திரம் இதன் உபயோகம் அனுமதிக்கப்படும்.

(ii) நியம வளிமண்டலம் (atm) நிறைவுகள், அளவைகள் என்பன பற்றிய பொது மாநாட்டினால் குறித்துரைக்கப்பட்ட நியம நிலைமைகளின் கீழ் இடைக்கடல் மட்டத்தில் வளியினால் உருற்றப்படும் அமுக்கமே நியம வளிமண்டலமாகும். நியம வளிமண்டலம் 101 325 பஸ்காலுக்குச் சமமாகும்.

(iii) மில்லிமீற்றர் இரசம் (குறியீடு: mm Hg) இரச மில்லிமீற்றரானது 133 322 பஸ்கால் அமுக்கத்துக்குச் சமமாகும்.

5.8 சக்தி, வேலை, வெப்பம் ஆகியவற்றின் அனுமதித்த அலகுகள்.—

சக்தி, வேலை, வெப்பக் கணியம் என்பன தொடர்பான அனுமதித்த அலகுகள்.

(i) இலத்திரன் வோல்ற்று (குறியீடு: eV) வெற்றிடத்தினூடாக 1 வோல்ற்று அமுத்த வித்தியாசத்தினூடாகச் செல்லும்போது ஓர் இலத்திரன் எய்தும் சக்தியே இலத்திரன் வோல்ற்றாகும். $1\ eV = 1.602\ 19 \times 10^{-19} J$ (அண்ணளவாக)

(ii) வாற்று மணி (குறியீடு: Wh) வாற்று மணி $3.6 \times 10^{3}$ யூலுக்குச் சமமாகும்.

5.9 வெப்ப நிலையின் அனுமதித்த அலகுகள் —

வெப்பநிலை தொடர்பான அனுமதித்த அலகு.

(i) பாகை செல்சியஸ் (குறியீடு: °C) பாகை செல்சியஸ் என்பது சர்வதேசச் செய்முறை வெப்பநிலை அளவீட்டினதாகும். வெப்ப இயக்கவியல் வெப்பநிலை அளவீட்டில் அதன் பூச்சியமானது 273.15 K ஆகும். பாகை செல்சியஸ் = பாகை கெல்வின்

## இரண்டாம் அட்டவணை

பாகம் I

1. பின்வரும் அளவீட்டு அலகுகளைப் பொறிமுறை எந்திரவியல் துறையில் மட்டும் பயன்படுத்தலாம் :

1.1 நீளத்தை அளத்தல் அங்குலம் (குறியீடு: in அல்லது ″ )
அங்குலம் செப்பமாக 0.025 4 மீற்றருக்குச் சமம்.

1.2 திணிவை அளத்தல் இறாத்தல் (குறியீடு : lb)
இறாத்தல் செப்பமாக 0.453 542 37 கிலோகிராமுக்குச் சமம்.

பாகம் II

1. பின்வரும் அளவீட்டு அலகுகளை வான் அல்லது கடற் கப்பலோட்டல் துறையில் மட்டும் பயன்படுத்தலாம் :

1.1 நீளத்தை அல்லது தூரத்தை அளத்தல் — கலவர் மைல்
கலவர் மைல் 1852 மீற்றர்த் தூரத்துக்குச் சமம்.

1.2 வேகத்தை அளத்தல் நொற்று
நொற்று என்பது 1 கலவர் மைல்/மணித்தியாலம் என்னும் வேகத்துக்கு சமமான வேகமாகும்.

## மூன்றாம் அட்டவணை

பாகம் I

வியாபாரத்துக்கான அளவீட்டு அலகுகள்

1.1 நீளத்தை அளத்தல்

| | | |
|---|---|---|
| கிலோமீற்றர் | (குறியீடு : km ) | = 1 000 m |
| மீற்றர் | (குறியீடு : m ) | |
| டெசிமீற்றர் | (குறியீடு : dm ) | = $\frac{1}{10}$ m |
| சென்றிமீற்றர் | (குறியீடு : cm ) | = $\frac{1}{100}$ m |
| மில்லிமீற்றர் | (குறியீடு : mm ) | = $\frac{1}{1\ 000}$ m |
| மைக்குரோமீற்றர் | (குறியீடு : μm ) | = $\frac{1}{1\ 000\ 000}$ m |

1.2 பரப்பளவை அளத்தல்

சதுர கிலோமீற்றர் (குறியீடு : $km^2$ ) = 1 000 000 $m^2$

சதுர மீற்றர் (குறியீடு : $m^2$ )

சதுர டெசி மீற்றர் (குறியீடு : $dm^2$ ) = $\frac{1}{100}$ $m^2$

சதுர சென்ரிமீற்றர் (குறியீடு : $cm^2$ ) = $\frac{1}{10\ 000}$ $m^2$

சதுர மில்லிமீற்றர் (குறியீடு : $mm^2$) = $\frac{1}{1\ 000\ 000}$ $m^2$

ஹெக்ரெயர் (குறியீடு : ha ) = 10 000 $m^2$

1.3 கனவளவை அல்லது கொள்ளளவை அளத்தல்

கன மீற்றர் (குறியீடு : $m^3$ )

கன டெசிமீற்றர் (குறியீடு : $dm^3$ ) = $\frac{1}{1\ 000}$ $m^3$

கன சென்ரிமீற்றர் (குறியீடு : $cm^3$ ) = $\frac{1}{1\ 000\ 000}$ $m^3$

கன மில்லிமீற்றர் (குறியீடு : $mm^3$ ) = $\frac{1}{1\ 000\ 000\ 000}$ $m^3$

ஹெக்ரோலீற்றர் (குறியீடு : L
அல்லது l ) = $\frac{1}{10}$ $m^3$

லீற்றர் (குறியீடு : L
அல்லது l ) = $\frac{1}{1\ 000}$ $m^3$

டெசிலீற்றர் (குறியீடு : dL
அல்லது dl ) = $\frac{1}{10\ 000}$ $m^3$

சென்ரிலீற்றர் (குறியீடு : cL
அல்லது cl ) = $\frac{1}{100\ 000}$ $m^3$

மில்லிலீற்றர் (குறியீடு : mL
அல்லது ml ) = $\frac{1}{1\ 000\ 000}$ $m^3$

திணிவை அல்லது நிறையை அளத்தல்

மெட்ரிக் தொன் (குறியீடு: ) = 1 000 kg

கிலோகிராம் (குறியீடு : kg )

கிராம் (குறியீடு : g ) = $\frac{1}{1\ 000}$ kg

மில்லிகிராம் (குறியீடு : mg ) = $\frac{1}{1\ 000\ 000}$ kg

மைக்கிரோகிராம் (குறியீடு : µg ) = $\frac{1}{1\ 000\ 000\ 000}$ kg

மெட்ரிக் கரட் (குறியீடு : CM ) = $\frac{1}{5\ 000}$ kg

1.5 அடர்த்தியை அளத்தல்

கன மீற்றருக்கு மெட்ரிக் தொன்
(குறியீடு : $t/m^3$
அல்லது $t.m^{-3}$) = 1 000 $kg/m^3$

லீற்றருக்குக்
கிலோகிராம் (குறியீடு : $kg/L$
அல்லது $kg.L^{-1}$ = 1 000 $kg/m^3$

கன மீற்றருக்குக் (குறியீடு : $kg/m^3$
கிலோகிராம் அல்லது $kg.m^{-3}$)

மில்லிலீற்றருக்குக் (குறியீடு : $g/mL$
கிராம் அல்லது $g.mL^{-1}$) = 1 000 $kg/m^3$

லீற்றருக்குக் கிராம் (குறியீடு : $g/L$
அல்லது $g.L^{-1}$) = 1 $kg/m^3$

1.6 ஆடைகளின் ஏகபரிமான அடர்த்தியை அளத்தல்

கிலோமீற்றருக்கு மில்லிகிராம் (குறியீடு : mg/km)
= மில்லிதெக்ஸ் (குறியீடு : mtex)

கிலோமீற்றருக்கு டெசிகிராம் (குறியீடு : dg/km)
= டெசிதெக்ஸ் (குறியீடு : dtex)

கிலோமீற்றருக்குக் கிராம் (குறியீடு : g/km)
= தெக்ஸ் (குறியீடு : tex) = 1g/km

கிலோமீற்றருக்குக் கிலோகிராம் (குறியீடு : kg/km)
= கிலோதெக்ஸ் (குறியீடு : ktex) = 1 kg/km

1.7 அமுக்கத்தை அளத்தல்

மெகாபஸ்கால் (குறியீடு : MPa) = 1 000 000 Pa

கிலோபஸ்கால் (குறியீடு : kPa ) = 1 000 Pa

பஸ்கால் (குறியீடு : Pa )

1.8 நேரத்தை அளத்தல்

ஆண்டு

மாதம்

வாரம்

நாள் (குறியீடு : d) = 86 400 s

மணி (குறியீடு : h) = 3 600 s

நிமிடம் (குறியீடு : m) = 60 s

செக்கன் (குறியீடு : s)

மில்லி செக்கன் (குறியீடு: ms) = $\frac{1}{1\ 000}$ s

மைக்கிரோசெக்கன் (குறியீடு: µs) = $\frac{1}{1\ 000\ 000}$ s

நனோசெக்கன் (குறியீடு: ns) = $\frac{1}{1\ 000\ 000\ 000}$ s

1.9 தளக் கோணத்தை அளத்தல் .

ஆரையன் (குறியீடு: rad)

பாகை (குறியீடு: ° ) = $\frac{\overline{\wedge}}{180}$ rad

கலை (குறியீடு: ′ ) = $\frac{\overline{\wedge}}{10\ 800}$ rad

விகலை (குறியீடு: ″) = $\frac{\overline{\wedge}}{648\ 000}$ rad

1.10 திண்மக் கோணத்தை அளத்தல்

திண்மவாரையன் (குறியீடு : sr)

1.11 கதியை அளத்தல்.

மணிக்குக் கிலோமீற்றர் (குறியீடு : km/h) = $\frac{10}{36}$ m/s

செக்கனுக்கு மீற்றர் (குறியீடு: m/s)

1.12 ஆர்முடுகலை அளத்தல்.—

செக்கன் வர்க்கத்துக்கு மீற்றர் (குறியீடு: $m/s^2$)

1.13 கோண வேகத்தை அளத்தல்.—

செக்கனுக்கு ஆரையன் (குறியீடு : rad/s)

1.14 கோண ஆர்முடுகலை அளத்தல்.—

செக்கன் வர்க்கத்துக்கு ஆரையன் (குறியீடு : $rad/s^2$)

1.15 மீடிறனை அளத்தல்.—

கைகாஹேற்சு (குறியீடு : GHz) = 1 000 000 000 Hz

மெகாஹேற்சு (குறியீடு: MHz) = 1000 000 Hz

கிலோஹேற்சு (குறியீடு : kHz) = 1000 Hz

ஹேற்சு (குறியீடு : Hz)

மில்லிஹேற்சு (குறியீடு : mHz) = $\frac{1}{1\ 000}$ Hz

1.16 விசையை அளத்தல்.—

மெகாநியூற்றன் (குறியீடு: MN) = 1 000 000 N

கிலோநியூற்றன் (குறியீடு: kN) = 1 000 N

நியூற்றன் (குறியீடு) : N)

1.17 பிசுக்குமையை அளத்தல்.—

இயக்கப் பிசுக்குமை — பஸ்கால் செக்கன் (குறியீடு: Pa.s)

இயக்கத்தியற்ற் பிசுக்குமை—செக்கனுக்குச் சதுர மீற்றர் (குறியீடு $m^2/s$)

1.18 வெப்பநிலையை அளத்தல் .—

கெல்வின் (குறியீடு: K)

பாகை செல்சியஸ் (குறியீடு: °C) = 1K

1.19 வேலை, சக்தி, வெப்பக் கனியம் ஆகியவற்றை அளத்தல்.—

கிலோயூல் (குறியீடு): kJ )=1 000 J

யூல் (குறியீடு: J)

கிலோவாற்மணி (குறியீடு: kWh) = 3 600 000 J

1.20 வலு, சக்திப் பாய்ச்சல் வீதம், வெப்பப் பாய்ச்சல் வீதம் ஆகியவற்றை அளத்தல்

மெகாவாற்று (குறியீடு: MW) = 1 000 000W

கிலோவாற்று (குறியீடு: kW) = 1 000W

வாற்று (குறியீடு: W)

மில்லிவாற்று (குறியீடு: mW) — $\frac{1}{1\ 000}$ W

1.21 வெப்பக் கொள்ளளவை அளத்தல்.—

கெல்வினுக்கும் கிலோயூல் (குறியீடு: kJ/K) = 1 000 J/K

கெல்வினுக்கு யூல் (குறியீடு : J/K)

1.22 தற்சக்தியை அளத்தல் (திணிவு அடிப்படையிலான கலோரிப் பெறுமானம்).—

கிலோகிராமுக்கு கிலோயூல் (குறியீடு : kJ/kg) = 1000 J/kg

கிலோகிராமுக்கு யூல் (குறியீடு J/kg)

கிராமுக்கு யூல் (குறியீடு: J/g) = $\frac{1}{1000}$ J/kg

1.23 தற்சக்தியை அளத்தல் (கனவளவு அடிப்படையிலான கலோரிப் பெறுமானம்).—

கன மீற்றருக்குக் கிலோயூல் (குறியீடு: kJ/m³) = 10000 J/m³

லீற்றருக்குக் கிலோயூல் (குறியீடு: kJ/l) = $\frac{1}{1000\ 000}$ J/m³

1.24 மின்னோட்டத்தை அளத்தல்.—

அம்பியர் (குறியீடு : A)

மில்லியம்பியர் (குறியீடு : mA) = $\frac{1}{1\ 000}$ A

மைக்கிரோயம்பியர் (குறியீடு: μA) = $\frac{1}{1\ 000\ 000}$ A

1.25 மின்னியக்கவிசையையும் அமுத்த வித்தியாசத்தையும் அளத்தல்.—

கிலோவோல்ற்று (குறியீடு: kV ) = 1 000 V

வோல்ற்று (குறியீடு: V)

மில்லிவோல்ற்று (குறியீடு: mV) = $\frac{1}{1\ 000}$ V

மைக்கிரோவோல்ற்று (குறியீடு: μV) = $\frac{1}{1\ 000\ 000}$ V

1.26 மின் கொள்ளளவத்தை அளத்தல்

பரட்டு (குறியீடு : F)

மைக்கிரோபரட்டு (குறியீடு : μF) = $\frac{1}{1\ 000\ 000}$ F

பிக்கோபரட்டு (குறியீடு : pF) = $\frac{1}{1\ 000\ 000\ 000\ 000}$ F

1.27 மின் தூண்டற்றிறனை அளத்தல்

ஹென்றி (குறியீடு : H)

மில்லிஹென்றி (குறியீடு : mH) = $\frac{1}{1\ 000}$ H

மைக்கிரோஹென்றி (குறியீடு : μH) = $\frac{1}{1\ 000\ 000}$ H

1.28 மின் தடையை அளத்தல்

| | | | |
|---|---|---|---|
| மெகாஓம் | (குறியீடு : MΩ | = | 1 000 000 Ω |
| கிலோஓம் | (குறியீடு : kΩ) | = | 1 000 Ω |
| ஓம் | (குறியீடு : Ω) | | |
| மில்லிஓம் | (குறியீடு : mΩ) | = | $\frac{1}{1\ 000}$ Ω |
| மைக்கிரோஓம் | (குறியீடு : μΩ | = | $\frac{1}{1\ 000\ 000}$ Ω |

1.29 மின்கணியத்தை அளத்தல்

| | | | |
|---|---|---|---|
| அம்பியர் மணி | (குறியீடு : A.h | = | 3600 C |
| கூலோம் | (குறியீடு : C) | | |
| மைக்கிரோகூலோம் | (குறியீடு : μC | = | $\frac{1}{1\ 000\ 000}$ C |

1.30 ஒளிர் செறிவை அளத்தல்

கன்டெலா (குறியீடு :cd)

1.31 ஒளிர்ச்சியை அளத்தல்

லக்சு (குறியீடு lx)

1.32 ஒளிர்பாயத்தை அளத்தல்

லூமன் (குறியீடு :lm)

பாகம் II

வங்கியாபாரத்திலும் பயன்படுத்தவத [illegible]—அ [illegible] [illegible]

அ[illegible]

1. நீட்டலளவைகள்

பின்வரும் அளவைகள் :—

100 மீற்றர்

50 மீற்றர்

30 மீற்றர்

20 மீற்றர்

10 மீற்றர்

3 மீற்றர்

2 மீற்றர்

1 மீற்றர்

50 சென்ரிமீற்றர்

1 டெசிமீற்றர்

1 சென்ரிமீற்றர்

1 மில்லிமீற்றர்

1 மைக்கிரோமீற்றர்

2. சதுர அளவைகள்

1 சதுர டெசிமீற்றரின் அளவை அல்லது அதன் மடங்கு எதுவும்

3. (அ) கன அளவைகள்

0.001 $m^3$ ஆகிய கன டெசிமீற்றரின் அளவை அல்லது அதன் மடங்கு எதுவும்.

(ஆ) கொள்ளளவு அளவைகள்—திரவம்

பின்வரும் அளவைகள் :—

10 லீற்றர் அல்லது அதன் மடங்கு எதுவும்.
5 லீற்றர்
2 லீற்றர்
2 லீற்றர்
500 மில்லிலீற்றர்
200 மில்லிலீற்றர்
100 மில்லிலீற்றர்
50 மில்லிலீற்றர்
20 மில்லிலீற்றர்
10 மில்லிலீற்றர்
5 மில்லிலீற்றர்
2 மில்லிலீற்றர்
1 மில்லிலீற்றர்

4. நிறுவைகள்

(அ) பின்வரும் நிறுவைகள் :—

50 கிலோகிராம்
20 கிலோகிராம்
10 கிலோகிராம்
5 கிலோகிராம்
2 கிலோகிராம்
1 கிலோகிராம்

| | |
|---|---|
| 500 கிராம் | 500 மில்லிகிராம் |
| 200 கிராம் | 200 மில்லிகிராம் |
| 100 கிராம் | 100 மில்லிகிராம் |
| 50 கிராம் | 50 மில்லிகிராம் |
| 20 கிராம் | 20 மில்லிகிராம் |
| 10 கிராம் | 10 மில்லிகிராம் |
| 5 கிராம் | 5 மில்லிகிராம் |
| 2 கிராம் | 2 மில்லிகிராம் |
| 1 கிராம் | 1 மில்லிகிராம் |

(ஆ) பின்வரும் நிறுவைகள் :—

500 கரட்டு (மெட்ரிக்)

200 கரட்டு (மெட்ரிக்)

100 கரட்டு (மெட்ரிக்)

50 கரட்டு (மெட்ரிக்)

20 கரட்டு (மெட்ரிக்)

10 கரட்டு (மெட்ரிக்)

5 கரட்டு (மெட்ரிக்)

2 கரட்டு (மெட்ரிக்)

1 கரட்டு (மெட்ரிக்)

0.5 கரட்டு (மெட்ரிக்)

0.2 கரட்டு (மெட்ரிக்)

0.1 கரட்டு (மெட்ரிக்)

0.50 கரட்டு (மெட்ரிக்)

0.02 கரட்டு (மெட்ரிக்)

0.01 கரட்டு (மெட்ரிக்)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,859 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட் கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.